ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)


| தொகுதி 2 | நளஃஸு ஆவணிமீ 1உ<br>1916-ம்ஃஸு ஆகஸ்டுமீ 16உ | பகுதி. 2 |
|---|---|---|


## கடவுள் வணக்கம்

ஐந்து பூதமொரு கான னீரென
வடங்க வந்தபெரு வானமே
யாதி யந்தநடு வேது மின்றியரு
ளாய்நிறைந் திலகு சோதியே
தொந்த ரூபமுட னரூப மாதிகுறி
குணமி றந்துவளர் வஸ்துவே
துரிய மேதுரிய வுயிரி னுக்குணர்வு
தோன்ற நின்றருள் சுபாவமே
யெந்த நாளுநடு வாகி நின்றொளிரு
மாதியே கருணை நீதியே
யெந்தை யேயென விடைந்திடைந் துருகு
மெளிய னேன் கவலை தீரவுஞ்
சிந்தை யானதை யறிந்து நீயுனருள்
செய்ய நானுமினி யுய்வனோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

குன்றி டாத கொழுஞ்சுட ரேமணி
மன்று ளாடிய மாணிக்க மேயுனை
யன்றி யார்துணை யாருற வார்கதி
யென்று நீயெனக் கின்னருள் செய்வதே.

# ஆனந்தபோதினி

## ௲௯௱௨௰ ஆவணிமீ 1௳

நேயர்களே! கீழ்க்கூறப்படும் விஷயத்தைப் பிரியத்தோடு கவனம் வைத்து வாசிப்பீர்களெனப் பிரார்த்திக்கிறோம்:—

நாம் வைகாசி ஆனி இவ்விரண்டுமாதச் சஞ்சிகைகளிலும் இரண்டாம் வருடத்திற்கு முன்பணமாக ஜூலைமீ 14௳க்குள் அனுப்பாதவர்களுக்கெல்லாம் சஞ்சிகையை இரண்டாம்வருட சந்தாவிற்காக வி. பி. யி. லனுப்புவோமென்றுகூறியிருந்தோம். மேலும் சந்தாநம்பர் விலாசம் இவற்றைமறவாது குறிக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தும் அநேகர் மணியார்டர் கூபனில் ஒன்றும் குறிக்காமலே யனுப்பிவிட்டார்கள். சிலர் அன்னியரைக்கொண்டு அனுப்பிவைத்தனர். சிலர் ஒரேமணியார்டரில் நான்கு ஐந்து பேர்களுக்குச் சேர்த்தனுப்பிவிட்டு "விபரம் பின்னால் வரும் கடிதத்தில் கண்டுகொள்ளவேண்டும்" என்று கூபனில் எழுதிவிட்டார்கள். சிலர் ஒரேமணியார்டரில் சில புத்தகங்களுக்குக் கிரையமும் சேர்த்தனுப்பிவிட்டு முன்போலவே கடிதத்தில் விவரப்பார்க்கவென்று கூறிவிட்டார்கள். சிலர் சஞ்சிகை வெளியாகவேண்டிய காலங்கடந்தபின் அதாவது ஜூலை 16-க்குப் பின்னும் மாதக்கடைசிவரையிலும் ஆகஸ்ட்மீ 3, 4 தேதிகள் வரையிலும் கூட மணியார்டர் அனுப்பிக்கொண்டிருந்தனர். இதனால் சரியான நம்பர்களைக் கண்டுபிடிக்கவும் அந்தந்த மணியார்டருக்குரிய கடிதத்தைக் கண்டுபிடிக்கவும் நேர்ந்த ஆலசியத்தாலும் குழப்பத்தாலும் கடந்த சஞ்சிகையை 2, 3 தேதிகளுக்குள் அனுப்ப அனுகூலப்படாது போய்விட்டதோடு, இரண்டொரு சந்தர்ப்பங்களில் பணம் கட்டியவர்களுக்குத் தவறாய் வி. பி. யனுப்பப்பட்டு, பிறகு தவறு திருத்தப்பட்டது. ஆகையால் நமது சந்தாநேயர்கள் மேற்கண்ட ஆலசியத்தையும் தவறுதல்களையும் பொறுத்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம். இது நிற்க,

நாம் முன் பணம் அனுப்பாதவர்களுக்கு சஞ்சிகை வி. பி. யிலனுப்பப்படுமென்று தெரிவித்திருந்தபடியால் சஞ்சிகை வேண்டாத

சிலர் முன்னடித் தெரிவித்துவிட்டனர். சிலர் அவ்வாறு செய்யாது நாம் சஞ்சிகையை வி. பி. யி லனுப்பியபின்பு அதை வாபீஸ்செய்து நமக்கு வீண் நஷ்டத்தை யுண்டாக்கி யிருக்கிறார்கள்.

காகிதத்தின்விலை அதிகமாய் ஏறியிருக்கும் இச்சமயத்தில் நாம் இவ்வளவு குறைந்த சந்தாவிற்கு இச்சஞ்சிகையை வெளியிடுவது பொருள் வருவாயைக்கருதியா அல்லது பொது நன்மையைக் கருதியா வென்பது அறிவாளிகள் அனைவரும் அறிந்தவிஷயமே. இப்போது சிலர் மேற் கண்டவாறு வாபீஸ்செய்ததால் நமக்கு நேரிடும் நஷ்டத்திற்காகவாவது, அல்லது சந்தாதாரர்கள் குறைந்துவிடுவார்களென்பதற்காகவாவது நாம் விசனிக்கவில்லை. ஏனெனில் அவ்வாறு வாபீஸ் செய்தவர்களில் பெரும்பாலார், ஏதோ சில அசந்தர்ப்பங்களால் அப்படிச்செய்ய நேர்ந்ததால், பிறகு நாம் கார்டு அனுப்பியபோது மறுபடி சேர்ந்து விடுகிறார்கள். சிலர் நீங்கியேவிட்டாலும் வேறு சிலர் பதிலுக்குச் சேர்ந்துகொண்டே யிருக்கிறார்கள். மற்றப்படி நாம் மனம் வருந்துவதற்குக் காரணமென்னையெனின்,

நமது நாடு க்ஷேமப்படுவதற்கும் நமது சந்ததியார் நல்ல சீர்திருத்தமடைந்து மேலோங்கி வருவதற்கும், பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அவசியமான கருவிகளென்பதையும், அவை விர்த்தியடைவதற்காக நாம் பலரும் சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்பதையும், இத்தகைய விலைகுறைந்த சஞ்சிகையை நாம் கஷ்டமின்றி ஆதரித்துவந்தால் நமது சந்ததியார் நல்ல பலனை யடைவார்களென்பதையும் நமது நாட்டாரில் பலர் இன்னும் உணராதிருக்கும் பெருங்குறைக்கே நாம் மிகவும் வருந்துகிறோம். நமது நாடு க்ஷேமமடைய எவ்வளவு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நமது நாட்டிற்கு அவசியமோ, அதில் அரைவீசம் பங்கிற்குக்கூட இப்போது நடை பெறவில்லை. நடைபெறும் சஞ்சிகைகளில் சிலவற்றின் சந்தா அதிகமென்று நம்மவர் கருதுகின்றனர். அந்தோ! எத்தனையோ அனுவசியமான காரியங்களுக்கும், வீண்விளையாட்டான காரியங்களுக்கும் ஒருநாளையில் இரண்டு மூன்று ரூபாயேனும் அலட்சியமாய்ச் செலவழித்துவிடும் நாம், நமக்கும், நமது சந்ததியாருக்கும் தேசத்திற்குமே நிலையான நன்மையை யுண்டாக்கத்தக்க விஷயத்திற்காக வருடத்திற் கொருமுறை ஒன்று இரண்டு செலவழிப்பதற்காகப் பின்னிடைவதென்றால் நாம் எவ்வாறு மற்ற நாட்டாரைப் போல் முன்னுக்கு வருவது? நம் தாய் நாட்டின் க்ஷேமத்திற்கு அத்

யாவசியமான கல்வியின் அருமையை நாம் இன்னும் உணரவில்லை யென்றல்லவோ அன்னியர் நம்மை யிகழவிடமுண்டாகிறது? நாமும் மேல்நாட்டாரைப்போல் 'இலௌகிகவிஷயங்களில் மேம்பாடடைய வேண்டுமென்று வாயால்மட்டும் கூறிக்கொள்வதிலும், நமக்குத்தகாத விஷயங்களில் மட்டும் அவர்களைப் பின்பற்றி நடப்பதிலும் பயன் என்னை? அவர்களில் பத்திரிகைவிஷயத்தில் ஒவ்வொரு ஏழையும் கூலியாளுங்கூட என்ன செலவழிக்கிறான் என்பதையறிந்தால் நாம் வெட்கித்' தலைநாணவேண்டியதாய் முடியும்.

ஆகையால் சகோதரசகோதரிகளே! நமது சந்ததியார் முன்னுக்கு வரவேண்டிய விஷயத்திற்காகச் சொல்பப் பொருளைச் செலவிடப் பின்னிடையாது கல்வியபிவிர்த்தி யவசியம் வேண்டுமென்பதை மனதில் வைத்து இனியேனும் நம் நாடு முன்னுக்கு வரும் வழியில் நடந்துகொள்ள வேண்டுமென்றும், எல்லாம் வல்ல பரம் பொருளாகிய இறைவன் அவ்வாறே யருள் புரியவேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றோம்.

---

## வினை.

உலகில் வினையென்றும் விதியென்றும் கர்மம் என்றும் சாதாரணமாய்க் கூறப்படுவதை நாம் கேள்விப்படுகிறோம். ஒருவன் களவாடுகிறான். அதற்காக அவன் தண்டனையடைந்தால் அவனைச் சேர்ந்தவர்கள் "அவன் தலையெழுத்து அப்படியிருந்தது. இல்லாவிட்டால் அவன் திருடுகிறவனா" என்கிறார்கள். இவ்வாறு ஒரு குற்றத்தைச்செய்து அதனால் கஷ்டத்தை யடைபவர்களில் ஏறக்குறைய அனைவருமே இது என்தலைவிதி. கடவுள் இப்படி நான் அனுபவிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார் என்று கூறுகிறார்கள். ஒருவன் "எல்லாம் கடவுள் செயல். கந்தன், பொன்னன் மண்டையை யுடைக்கவேண்டுமென்றும், அதனால் அவன் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை அடையவேண்டுமென்றும் கடவுள் விதித்திருக்கிறார். 'எல்லாம் அவன்செயலே' யென்றும், 'அவனன்றி யோரணுவுமசையாது' என்றும், 'சிவன்செயலாலே யாதும்வரும்' என்றும் தாயுமானவரே கூறியிருக்கிறாரல்லவா' என்று பிரசங்கம் செய்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அந்தோ! இதுமுழுதும் தவறான அபிப்பிராயம். இத்தகையோர் ஆன்றோர் வாக்கியங்களைத் தங்கள் நாட்டத்திற்கு ஒத்தவித

மாய் அர்த்தம்செய்து கொள்ளுகிறவர்களே யன்றி வேறல்ல. கற்றோரிலும் சிலர் பெரியோர் நூல்களுக்கு உரையெழுதுவதில் நூலாசிரியருடைய கருத்தைச் சற்றேனுமறிய முயலாது தங்கள் கொள்கைக்குத் தக்கவிதமாய் உரை யெழுதுகிறார்கள். ஒருவார்த்தைக்குப் பல அர்த்தங்கள் இருப்பினும் அதைக் கூறியவர்கள் எக்கருத்தோடு அதை யுபயோகித்திருக்கிறார்களென்று நாம் அறிந்து எழுதுவது உசிதமாகுமேயன்றி, நமது பிரியப்படி உரையெழுதுவதும் பிறகு அந்தவார்த்தைக்கு நான் கூறியபொருள் சரியானதே யென்று அகராதியையும் நிகண்டையும் ஆதாரங்காட்டுவதும் அறிவில்லார் செய்கையேயாகும். ஔவைபிராட்டியார் "நோன்பென்பது கொன்று தின்னாமை" என்று கூறியுள்ளார். அதன்பொருள்,

"நோன்பென்பது = விரதமென்று கூறப்படுவது.

கொன்று தின்னாமை = ஓர் சீவனைக்கொன்று புசியாமலிருப்பதே யாகும்.

அதாவது—இன்னொரு சீவனைக் கொல்லாமலிருப்பதே விரதம்" என்பதாம்.

அதைவிட்டு,

"நோன்பென்பது = நோன்பென்று கூறுவது

கொன்றுதின் + ஆ + மை—ஆ = பசுவையும், மை = ஆட்டையும், கொன்றுதின் = கொன்றுசாப்பிடு" என்பதேபொருள் என்று ஒருவன்கூறினால் அவனை அறிவில்லாதவனென்று தானே கூறுவோம்.

எல்லாம் ஆண்டவன்செயல் என்றால் "நான் என்ற அகங்காரத்தைவிட்டு நமக்குநேரிடும் நன்மை தீமை யாவும் கடவுளால் அமைக்கப்பட்டவை, ஆதலால் வேறொருவரைக் காரணமாகக் கொண்டு அதற்காக அவர்கள்மேல் கோபங்கொள்வதும் நிந்திப்பதும் ஆகாதென்று விட்டு, தற்செயலற்று எல்லாம் அவன் செயலென மனப்பூர்வமாய் உணர்ந்து மன ஒடுக்கம் பெறவேண்டும்" என்பதே யன்றி நாம்செய்யும் துர்க்காரியத்தைக்கூட கடவுள்தான் செய்யும்படி செய்கிறார் என்று பொருள்கொள்ளலாகாது. மனிதன் தான்முயன்ற ஒருகாரியத்தில் ஜெயமடைந்தால் "ஆகா! நான் அவ்வளவு தந்திரமாய் வேலைசெய்யாவிட்டால் அக்காரியம் முடிந்திருக்குமா. நானில்லாதிருந்தால் இவர்கள் யாராலும் ஒன்றுமேமுடியாது. இவன் எப்படி

யிதை முடிக்கப்போகிறான் என்று நீங்களெல்லாம் சந்தேகம் கொண்டிருந்தீர்கள், என் சாமர்த்தியம் உங்களுக்குத் தெரியாது" என்று தானே அதைச் செய்துமுடித்தவனாய்த் தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிறான். அச்சமயம் கடவுள் என்ற நினைப்பே யிவனுக்குக் கிடையாது. அப்படிக்கின்றி தன்காரியத்தில் அபஜயமடைந்தாலோ,

"ஐயா என்னால் வஞ்சனையில்லை. என்னாலான சாமர்த்திய மெல்லாம் செய்துபார்த்தேன். கடன்வாங்கியும் பார்த்தேன். கடவுள் கிருபையில்லை, மனிதன் எத்தனம் பிரயத்தனம்தான் செய்யலாம், எல்லாம் முடித்துவைப்பவன் அவனல்லவோ" வென்று காரணத்தை யடியோடு கடவுள்மேல் போட்டுவிடுகிறான்.

இவனா எல்லாம் அவன்செயலென்று எண்ணி நடப்பவன்?

வினையென்றும் விதியென்றும் ஒன்றுண்டென்பது உண்மையே. அது நாம் முன்செய்த செயல்களுக்கு ஈடாய்க் கடவுளாலளிக்கப் பட்ட பிரதிபலன். அதை நாம் அனுபவிக்கும்படிசெய்வது கடவுளின் தொழில். அதுவே திதித்துவம். அதற்காக ஒரு முயற்சியும் நாம் செய்யவேண்டுவதில்லை. அது தானாகவேவரும். அதைத்தடுக்க நம்மால் முடியாது. அது ஜடம். அதைக்கடவுள் நமக்கு ஊட்டி வைக்கிறார். ஆகையால் நம்மை ஒருகாரியத்தைச்செய்யும்படி தூண்ட அதற்கு வல்லமையில்லை. நாம் சிந்தித்து நாம் ஒன்றும் செய்யாம லிருக்கும்போதே நமக்குத் தடுக்கமுடியாமல் நேரிடும் இன்பதுன்பங்களே வினை அல்லது விதியென்பது.

ஆண்டவன் நமக்கு இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியும் அறிவைத் தந்திருக்கிறார். அந்த அறிவைக்கொண்டு நாம் செய்வதெல்லாம் நமது செய்கையே. அவையனைத்தும் கடவுள் செயலாகா. ஆகையால் அவ்வறிவைக்கொண்டு நாம் பாபக்ருத்தியங்களை நீக்கி நல்லவற்றைமட்டும் செய்து வருவது நமது கடமையாகும்.

இதை நோக்கியே—

இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனால் வருமென்ற மூடர்க ளதோகெதி யடைவார்கள்
இந்தச் சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனா லன்றெனும் விவேகிக ளமலவீ டடைவாரே"

என்று கூறப்பட்டிருக்கிறது.

ஜீவச்செயல்வேறு கடவுட்செயல்வேறு, ஆகையால் ஜீவனால் நேரிடும் செய்கைகளையெல்லாம் கடவுள் செயலென்று கூறும் அவிவேகிகள் அதோகதியடைவார்கள். அப்படியின்றி இந்தச்சீவனால் வரும் செய்கைகளெல்லாம் இவன் செயலேயல்லாமல் கடவுள்செயலல்லவென்று உணர்ந்துநடக்கும் அறிவுடையோரே மோக்ஷவீடடைவார்கள் என்பதேயிதன்பொருளாகும். ஆதலால் நமது செயலை விதியென்று கூறுவதொழிந்து விலக்கியவற்றை யொழித்து விதித்தவற்றைமட்டும் செய்ய முயலல்வேண்டும்.

---

## தந்தை தாய்ப்பேண்

(29-ம் பக்கத்தொடர்ச்சி. தொகுதி. 2.)

### சரிதை 1. ஸ்ரீராம பிரான்.

நமது மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்களின் இந்தியப் பிரதிநிதியாரின் தலைமைஸ்தானமாக டில்லி யெனும் பெயருடன் கீர்த்திபெற்று விளங்குவதாய அயோத்திமா நகரின் கண் முன் அறுபதினாயிர வருடம் அரசுபுரிந்த ரவிகுலதிலகராகிய தசரத சக்ரவர்த்தியாரின் திருப்புதல்வராகிய தசரதநந்தனாகிய ஸ்ரீராம பிரானுக்கு மறுநாள் மகுடாபிஷேக மெனப் பிரசித்தப்படுத்தியதை யறிந்த மந்தரையென்னும் கூனியென்பவள், தன்னைச் சிறுவயதில் இராமர் உண்டைவில்லால் அடித்த விளையாட்டுத்தன்மையைப் பொறுதவளாய்க் கேடுநினைக்கவெண்ணித் தனதுஎஜமாட்டியாகிய கைகேயிபாலணுகி பல துர்ப்போதனைகளைப் போதித்து, முன்னம் தசரதர் சம்பராசுரனோடு போர் புரிந்த காலையில் தனக்கு உதவிசெய்த கைகேயியிக்குக்கொடுத்திருக்கும் இரண்டுவரங்களையும் நினைப்பூட்டி அவ்வரத்தைத் தற்போது தந்திரமாய்ப் பெற்றுக்கொண்டு, அவளது குமாரனாகிய பரதனுக்குப் பட்டங்கட்டுவதென்றும், ஸ்ரீராம பிரானைப் பதினான்கு வருடம் வனவாசம் செய்து வரவேண்டுமென அனுப்புவதெனவும், என்ற இரண்டு வரங்களையும் அரசனிடம் பெற்று வருதி எனலும் கைகேயி, அன்றிரவு தனதந்தப் புரத்திற் கெழுந்தருளிய தசரதர் அங்குவருமுன்னே, 'நீலிக்கு நிமையிலே கண்ணீர்' என்பதற் கிணங்க முன்னால் செய்யக் கூடிய ஜாலங்களெல்லாம் செய்து வந்ததும், முன்னருளிய இருவரங்களையும் பெற்றுக் கொண்டபின் விஷயமுரைத்திடக் கேட்டதசரதர் 'பெற்றமனம் பித்து' என்பதேபோல் துயரக்கடலிலாழ்ந்து பிரக்ஞையின்றி

சோர்ந்திடக்கண்டும் கவனியாது கலங்கா நெஞ்சுடையளாய், தன தபீஷ்டத்தை நிறைவேற்றுதலே தன் கருமமெனத் தக்ஷணமே இராமபிரானை யழைத்து தனபீஷ்டத்தையும் தந்தையளித்த வரத்தையும் இது வுன் நன்மைக்கே யெனவும் சொல்ல

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'
'தாய் சொற்றுறந்தால் வாசக மில்லை'

என்னும் உண்மைவாக்கியத்தையோர்ந்த இராமபிரான் தாய்தந்தையரின் வாக்கியத்தை ஆதரிக்கத்துணிந்து தம்பி இலக்ஷ்மணனுடனும் மனைவி ஜானகியுடனும் யாவர் சொல்லியும் கேளாது மேற்கூறிய இரு வாக்கியத்தையும் மெய்ப்பிக்கஉறுதிகொண்டு வனம்சென்றுமுனிவர்க்கும் ஏனையோர்க்கும் வேண்டிய உதவிகளைப் புரிந்தும், அவர்களின் இடுக்கண்களையகற்றியும் துஷ்டர்களை நிக்ரகம் செய்து சிஷ்டர்களைப் பரிபாலனம்செய்தும் தன் கஷ்டங்களைப்பொருட்படுத்தாது பதினான்கு வருடம்சென்று தம் நாடடைந்தது முதலான ஏனைய விஷயங்களும் நேயர்களான சகோதரர்கட்குப் பெரும் பாலும் தெரிந்தவையே.

---

## சரிதை 2 யயாதியின் குமாரன் பூரு.

யயாதி மகாராஜன் சந்திரவமிசத்துத் துவாபரயுகத்தினர். இவர் அநேக ஆண்டுகளாக அறநெறி அணுவேனும் அகலாது அரசாண்டு, அநேக போகபாக்கியங்க ளனைத்தும் அனுபவித்தும் ஆசை அகலாது அதிகமுற்று வருத்த, அவனியின் கண் இன்னும் அநேக காலம் போகபாக்கியங்களை அனுபவிக்கக்கருதி அதற் கவசியம் வேண்டியதாய இளமையைப்பெறத் தமது ஜேஷ்டபுதல்வனாகிய 'யது'வையழைத்து, எனக்கின்னும் இவ்வுலக வின்பத்தை அனுபவிக்க ஆசையிருப்பதால் உனது யௌவனத்தை எனக்குக்கொடுத்து எனது முதுமையைச் சிறிதுகாலத்திற்குப் பெற்றுக்கொண்டிருவென, அவன் மிகவும் கஷ்டமான முதுமையைப்பெற்று, சுகமான யௌவனத்தை யளிக்க எனக்குப் பிரியமில்லை எனவும், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை', தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை, 'ஏவா மக்கள் மூவாமருந்து' என்னும் அரிய பெரிய அமுதவாக்கை அறியாது அறைந்த நீயும் உனது வமிசத்தாரும் அஞ்ஞானமடைந்து ராஜ்ஜியத்தையாளும் வல்லமையற்றுப் போகக்கடவீரெனச் சாபங்கொடுத்து, மற்ற மூன்றுபுதல்வரைக்கேட்க அன்னவர்களும் அவ்விதமே அறைதலும், அவர்கட்கு மவ்விதமே சாபங்கொடுத்து, யாவர்

க்கு மிளையோனான 'பூரு' வைக்கேட்டனும் மேற்கூறிய மேலோர் வாக்கின் உண்மையையறிந்த அவன் அக்ஷணமே தன் இளமையைத் தன் தபோபலத்தால் தந்தைக்களித்து தனயனெனும் தகைமை பொருந்திய தண்ணளிவாக்கை நிலைநிறுத்தி முதுமையைத்தான் ஏற்றனும், தந்தையாகிய யயாதி தனயனை வாயாறவாழ்த்தித் தான் வெருகாலம் போகபாக்கியங்களை அனுபவித்துக் கடைசியில் கடவுளை யறிந்து கதிபெறலே சிறந்ததெனத் தேர்ந்து தமது முதுமையைப் பெற்று இளமையொடரசையுந்தன் தனயன்பா லளித்துத் தானும் தன் மனைவியும் தனியே யாரணியஞ் சென்றனர். தராதலத்துள் ஏக வெளியாய் எங்கும் பராபரமாயிருக்கும் பரம்பொருளாய பகவனை வழிபடற்கு,

பூருவோ சிங்காசனமேறி நீதி தவராது, ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தனன். பெற்றோருடைய விருப்பம் போல் நடப்போரே பிள்ளைகளெனவும் மற்றையோர் இள்ளைக ளெனவும் பெரியோர்கள் செப்புதலானும் தாய் தந்தையருடைய அருள்மொழியை ஆதரிக்காத 'யது' முதலிய நால்வர்களுடைய நிலைமையையும் ஆதரித்த பூரு வின் நிலைமையையும் கவனிப்போரோடருந் தமிழ் வேதமெனச் செப்பும்.

> " எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
> பண்புடை மக்கட் பெறின் "

என்னும் வள்ளுவனாரின் குறளையும் சவனிப்பார்களாக.

---

## இரண்டு சந்தேகங்கள்.

1. மாசிநிலவு ஆகாது. ஏன்?
2. கதாநாயகர்களின் பெயர்.—

நாவல்களில்வரும் கதாநாயகர்களின் முழுப்பெயரையும் எழுது தலே உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வாசிப்பதற் கேதுவாகுமே யன்றி, சுருக்கமாக ஒரெழுத்து இரண்டெழுத்துகளில் மட்டும் எழுதுவதானது அந்நாவலையே வாசிப்பதற்கு அருவருப்பையும் சிரத்தையின்மையையும் உண்டாக்குவனவாம். அவ்விதம் சுருக்க மாகக் குறிப்பதும், ஆரம்பத்தில் ஒவ்வொரு கதாநாயகர்களின் முழுப்பெயரையும் இரண்டொருதடவைபாவது குறித்துப் பிறகு அக்கதாநாயகர்களின் பெயரைச் சுருக்கமாகவே குறித்தலும் ஒரு வாறு கதாநாயகர்களைத் தெரிந்துகொண்டு படிப்பதற்குச் சந்தோஷ

காமாயிருக்கும். அவ்விதமின்றி யாவும் சுருக்கமாக எழுதப்படின் எவ்விதம் அவாவுண்டாகும். எத்தனைதரம் அட்டவணையைத் திருப்பித் திருப்பிப்பார்ப்பது? இதுவே வெறுப்பையுண்டாக்குகிறது.

இதிலேற்படும் தத்தம் அபிப்பிராயங்களை நேயர்கள் நமதானந்தன் மூலமாய்த் தெரிவித்து எமது சந்தேகத்தினை அகற்றுவார்களென எதிர்பார்க்கின்றேன். (ஓர் சந்தேகி.)

10-9-16-க்குள் விருப்பமுடையோர் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டுவிடும்படி கோருகிறோம். (ப-ர்.)

---

## கேடு செய்தல்.

"கெடுவான் கேடுநினைப்பான்" என்பது நம்நாட்டுப் பழமொழி. ஒருவனைக் கெடுக்கவேண்டுமென்று கருதுபவனே கேடுறுவனென்றால் கெடுப்பவன் கேடுறுவதுஞ் சொல்லவேண்டுமோ? நாம் ஒருவனை எப்படிக்கெடுக்க விரும்புகின்றோம்? அவன் நம்மிலும் வல்லானேயாயினும் வல்லான் அல்லானேயாயினும் அவனை மிகவும் ஈனஸ்திதியை அடையுமாறு செய்யவே முயல்கின்றோம். உண்மையில் நாம் ஒருவனைக் கெடுக்கவல்லோமா என்பதை யோசிக்கின்றோமில்லை. நாம் ஒருவனை எவ்வாறுதான் கெடுக்கமுயன்றாலும், அவன் மாறி நம் சமத்துவத்துக்கு வருகிறான் என்பதை உற்றுணர்வோமாயின், நாம் எவர்க்கும் இன்னலிழைப்பதின்றாம். எல்லாம் வல்ல இறைவனருள் மோக்ஷவீடு, நமக்குமாத்திரமல்ல, நம்மோடு மாறுகொண்ட நமது பகைவனுக்கும் கிடைப்பதால், அதனைக் கெடுக்கக்கூடாத நாம் கேடுசெய்வதும் கூடாததேயாம். நிற்க, நம் ஆற்றல்காரணமாக அஃதிலார்மேல் சீற்றங்கொள்வது சிறப்பாகாது.

> " சிறப்பீனுஞ் செல்வம்பெறினும் பிறர்க்கின்னா
> செய்யாமை மாசற்றார் கோள்."

என்பது தெய்வப்புலவர் திருவாக்கு. தன் புயவலியாலும், தன்னனைய தம்பியர்வலியாலும், அங்கர்கோன் (கர்ணன்) வலியாலும், கங்கை மகன் பீஷ்மர், விதுரன், துரோணன் என்பார் தன்னுடனிருப்பதாலும், மாயச்சகுனியின் வஞ்சமிகு மந்திராலோசனைச் சூழ்ச்சியாலும், மற்றுளவேந்தராலும், நாடிழந்த பாண்டவரைத் துரும்பெனநினைத்த துரியோதனன், ஸ்ரீகிருஷ்ணபகவான் தாமே தூதுசென்று சமாதானம் வேண்டியும் இணங்காது, அவருடன் பொருது, 'முடிவில் எவருமழியத்தானும் பீமன் கதையால் மண்டை

யுடைந்து மாண்டசெய்தி நாமறியாத தொன்றல்ல. நம்மனுபவத்தும் இவர் நமக்கொரு பொருட்டோவென்று நம்மால் அலட்சியஞ்செய்யப் படுவோர், செயற் கருஞ்செயல்கள்செய்து நம்மையடக்குவதுங் காண்கின்றோம்.

பகைவர் தளர்ந்தனராயினும் அவர் தளர்ந்தவிடத்து அவர்க்குக் கேடுசெய்வது முறையன்றும். ராகுவென்னும் பாம்பும் தேய்பிறையைப்பற்றாது பூரணசந்திரனையே பற்றும். இதனை,

> "பகைவர் பணிவிடநோக்கித் தகவுடையார்
> தாமேயுநாணித் தலைச்சொல்லாற்—காணு
> யிளம்பிறையாயக்காற் றிங்களைச்சேரா
> தணங்கருந்துப் பி னரா."

என்னும் நாலடிச்செய்யுளால் நன்கறியலாம்.

நாம் ஒருவனுக்குக் கேடுசெய்ய, அதனால் அவன் வெகு நன்மையடையவும், கேடுசெய்த நாமே வெகுகஷ்டம் அனுபவிக்கவும்நேரிடுவதும் உண்டு. இதனை 1-தொகுதி 8-ம் பகுதி ஆனந்தபோதினி "கெடுவான் கேடுநினைப்பான்" என்ற வியாசத்தில் இருகதைகளால் நன்குபோதிக்கின்றது.

நாம் ஒருவனுக்குக் கேடியற்ற அவன் அதனால் வெகு அல்லற்பட்டு, ஈற்றில் அளப்பரும் நன்மையடையவுங்கூடும். தவமுனி விசுவாமித்திரர், திகிரிமன்னன் திரிசங்குமைந்தனை அறக்கெடுதிகள் மிகச்செய்ததனால், அறநிலைதிறம்பா அவ்வரசன் சொல்லொணுத் துயர்க் கடலி லமிழ்ந்தியும், பின்னர் பிரமரிஷியாங் கௌசிகமுனியை வாய்மையால்வென்று மிகச்சிறப்பெய்தி உலகுள்ளளவும் இசை நிறுவிப்போயின சரிதை இதற்குத் தக்க சான்றும்.

---

## எனது குருவின் சில உபதேசங்கள்—

அதிருஷ்டஜயம் அபூர்வம்: அருகதைஜயம் நிச்சயம்.
அதிர்ஷ்டம் அதை நம்புபவனின் விரோதி.
அறிவின்மை ஆர்த்துவிளிக்கும், அறிவுடைமை அமர்ந்துகேட்கும்.
திறமைக்கதிகம் சம்பளம் எதிர்பார்ப்பவன் மௌட்டீகன்.
சோம்பல் வியாதிக்கு மருந்து அவசியம்.
கைவேலைக்குக் கூலி: தலைவேலைக்கு மாலை.
மந்தவியாபாரிக்கு அந்தமடுக்கும்.
வைராக்கியம் வழியறியும்.

எதிரென்பதில்லாவிடில் ஜெயமென்பதில்லை

ஒழிந்தசமயத்தோராதல் அழிந்தசமயத்திற்குதவும்.

காரியவேதனையிலும் காரணச்சிந்தனையே இலாக்கியம்.

ஞானிகுற்றம் செய்யானென்பதில்லை; அதனினின்றும் அறிவானென்பதாகும்.

அறிவு துணையுடையோன் அபஜெயமடையான்.

ஏற்றப்படுவதிலும் ஏறுவதே பெருமை.

---

## திருவள்ளுவ நாயனார் நிலைமை.

(24-ம் பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் பல சமையத்தோரும் தமது சமையத்தாரென்றது போலக் கொண்டு பாராட்டப்பட்ட நாயனாரை இன்ன சமயத்தினரென் றெவ்வாறு மதித்துக் கொள்ளக்கூடும் ?

மதிக்குந் தகுதியை யுன்னில்.

சைவசமயத்தார், நாயனார் கூறியவற்றுள், "இந்திரனே சாலுங் கரி" என்றதையும் "என்புமுரியர் பிறர்க்கு" என்றதையும் மற்று மிவைபோல்வனவற்றையும் கொண்டு நாயனாரைத் தங்கள் சமையத்தினரே யென்று சாதிக்கக்கூடும். புத்தர்களும், நாயனார் கூறியவற்றுள், "மலர் மிசையேகினான்" "எண் குணத்தான்" என்றவற்றையும் இவைபோல்வன பிறவற்றையுங் கொண்டு காட்டுவது மன்றி, மேலே கூறியவற்றில், காண்கின்ற முறையைப்பற்றி, சாதாரணமாக, சைவசமையத் தொண்டரை அடியாரென்றலும் வைணவ பக்தரை தாதரென்றலும் அருகசமைய மேலோரை யடிகளென்றலும் பெரும்பாலு மூலக வழக்கமானதால் அவ்வழக்கைக் கொண்டு, சிவப்பிரகாசமுனிவர்நாயனாரை தமது சமையத்தினரல்லர், அருக சமையத்தினரேயென்பது தோன்ற அருக முனிவர்கட்குரியதாகவுள்ள "அடிகளென்னும்" பெயரை நாயனாருக்குக் கொடுத்தாரென்றும், நாயனார்மீது தாம் வைத்திருக்கு மன்பின் பெருக்காற் பாராட்டிக்கொண்டாரென்றும் காரணங்கூறி மறுத்துத் தங்கள் சமையத்தினரே யென்று ஸ்தாபிக்கக்கூடும். இவைபோலவே மற்றச் சமையத்தார்களுங் காரணங்கூறி தங்கள் சமையத்தினரென்று கொள்ளவுங்கூடும். ஆனதினால் ஒவ்வொரு சமையத்தாராலும் காட்டப்படும் போலிக்காரணங்களைக் கொண்டு ஸ்தாபிக்கும் சமையத்தினராக நாயனாரைக் கொள்ளக் கூடாதென்பதே தகுதியாகும்.

ஆனால் நாயனாரை, கொள்ளுவார் கொள்ளும் சமையங்களி னின்று விலக்கிவிட்டால், வேறு என்ன சமைய நிலையினராகக்கொள் ளுகிறதென்று யோசிக்கின், நாயனாரை, சமயாதீத நிலையினரெனக் கூறுதலே சிரிதாம்.

ஆனால், சமையங்கடந்ததான நிலைமையொன் றுளதோவென ஆராயின் தாயுமானசுவாமிகள்:—

"சைவசமையமே சமையம் சமையாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக்கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமையநெறிபுகுதவேண்டா முத்திதரு
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே"

என்றார்.

இதில், சமையாதீத நிலையை யனுக்கிரகஞ்செய்யும் இம்மன்று, அது பெறவேணுமானால் வாருங்களென்று ரென்றுகிறது. இதனால், தாம் ஒரு சமையநிலையில் நின்றாராலும், சமையாதீத நிலையென்று ஒன்றுண்டென்றும் அந்நிலையே மேலான நிலையென்றும் அந்நிலையைப் பெறவே தமக்கு விருப்பமென்றும் தாம் பெறுமின்பம் யாவரும் பெறவளிப்பதே கடமையென்று கொண்டுலகத்தை யழைத்தாரென்று மாயிற்று. ஆதலால் சமையாதீத நிலையுண்டென்ற துண்மையாம்.

ஆனால் அச்சமையாதீத நிலைமை யெத்தன்மைத்தென ஆரா யின்:—

ஒரு கடவுளே பலரும் பலவகைப்பாவனைகளாகப் பாவித்துப் பாராட்டுமுறைமையை யுற்றிருக்கிறதென்றும், பலரும் பலபல சமையங்களாக நின்று பாராட்டினாலும், பாராட்டப்பட்ட அவ்வச் சமையங்களிலும் அவ்வப் பாவனா ரூபங்களாக நின்று கிருபையளிப் பனவெல்லாம் ஒரேகடவுளே யாகுமென்றும், அதனாலெந்தச் சமை யங்களையும் நிராகரிக்காமல் உலகங்களெல்லாம் செழித்தோங்கத் தக்க அருட்குணத்தோடு உலகில் எந்தெந்தச் சமயத்தைக்கொண் டொழுகினாலும் அந்தந்தச் சமையத்தினர்கொள்ளும் பாவனைக் கடவு ளுக்குரிய பொதுவிலக்கணப் பெயர்களையே யெடுத்துத்தழுவி தாம் நடக்கும் நடைகளையும் தாம் போதிக்கும் முறைகளையும், எச்சமையத் தோரும் வெறுக்காம லொப்புக் கொள்ளத்தக்க முறைமையினின் றொழுகி, உலகுயிர் முழுவதிலுங் கருணைமாறாது உலகமுழுவதும் இகலோக பரலோகவின்பங்களைப் பெறத்தக்க ஞானத்தைவிளக்கும் வேதபோதனைகளைப் போதித்து தளராத சிந்தையோடு, கிடைத்தன

கொண்டனுபவித்து அவரவர்க்கு மவரவராகத்தோன்றும் நிலைமை யில் நிற்பதே சமையாதீத நிலையாகும். இவற்றில் ;

ஒரு கடவுளையே யுலகில் பலசமையத்தினரும் பலவித பாவனை களாகப் பாராட்டிவருகின்றன ரென்பதை, தாயுமான சுவாமிகள்.

"சமையகோடிகளெலாம் தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந் தெதிர் வழக்கிடவு நின்றதெது" என்றார்.

பலபலவான சமையங்கள்தோறும் நிற்பதெல்லாம் ஒரே கடவு ளென்பதை, சிவப்பிரகாச முனிவர்:—

"எவ்வகைச் சமையத்துக்கு மிறையவ
னொருவன்"

என்றார்.

சமையவாதம் பாராட்டாது எல்லாச்சமையங்களையும் அவி ரோதமாகக் கொண்டுபாராட்டி நிலைமைமட்டும் மாறாதிருத்தலே மேலான நிலையென்பதைச் சாந்தலிங்க சுவாமிகள்:—

"எம்மதத்தோ ரெவ்வகைநிட்டை செய்யினும்
சம்மத மேயெமக் குந்நீபற" என்றார்.

இம்முறையான சமயாதீதநிலையில் நாயனார் நின்றாரென்பது தோன்றவே, கல்லாடமுனிவர் முன் எடுத்துக்காட்டியதனுள்:—

"சமையக்கணக்கர் மதிவழிகூறாது" என்றார்.

உலகமெல்லாம் செழித்தோங்கி யிகலோக பரலோக வின்பங் களைப் பெறத்தக்கபடியுள்ள கருணையோடு நீதிபோதிப்பதே கடமை யென்று கருதி நாயனார் வேதத்தைப் போதித்தா ரென்பது தோன் றவே:—

"உலகியல் கூறினு" ரென்றார்.

இந்நிலைமையில் நிற்பதே மேலான நிலைமை, இந்நிலைமையைப் பெறு தலே மேலான ஞானம், இந்நிலைமையைக் கைக்கொள்ளவேண்டி யதே மேலான கடமை, இந்நிலையில் நிற்பதே சர்வசமையசம்மதம், இந்நிலைமையில் நிற்போர் மீதே கடவுளருக்குப் பிரீதி, யென்பன தோன்றவே:—

"பொருளிது" என்று, ரென்றார்.

நாயனார், இம்முறையான சமையாதீத நிலையினில் நின்றார். இம்முறை யான சமையாதீத நிலையினில் நின்றே இத்திருக்குறளாகிய வேதத் தைக் கூறினார். இந்நிலைமையைக் கொள்ளுவோர் வழியேதாம் நாம்

நிற்போமென்பது தோன்றவே, கடவுளரும் பொது நிலைமைக்கு அசரீரியும் உலக நிலைமைக்கு முதற்கவியுமாகக் கூறினாரென்று தோன்ற:-

" முதற்கவி பாடிய முக்கட்பெருமான் " என்றார்.

இன்னு மிவைபோல, விரித்தற்கின்றி யமையாத வண்ணமாக, பற்பலராலும், திருவள்ளுவநாயனாரையும்நாயனார் வேதமாகிய திருக்குறளையும் திருக்குறளின் கருத்துக்களையும் சிறப்பித்தெடுத்துப் பாராட்டப் பட்டவைகளையெல்லாம் விரிக்கிற்பெருகும். சுருக்கிச் சொல்லின் நாயனாரையும் குறளையும் குறட்கருத்தையு மெடுத்துப் பாராட்டாதார் உலகில் தோன்றிவாழும் மெய்ப்புலவோருள்ளும் மெய்ஞ்ஞானியோருள்ளும் சமையபோத காசிரியருள்ளு மொருவரு மிலரென்பது நிச்சயம்.

ஆனால், நாயனார் மனைவாழ்க்கையினின்றாரல்லவோ, மனைவாழ்க்கையைத் துறக்கும் சந்யாசமின்றி ஞானியராவருமுளரோவெனில், தாயுமானசுவாமிகள்

" இல்லறத்திருந்து மிதைய மடக்கிய
வல்லவன் றானே மகாஞானி யென்றேன்
துறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கொன்
றறவகை யறியான் அஞ்ஞானியென்றேன் " என்றருளியதாய்க் கூறப்பட்டிருக்கிறது.

பட்டிணத்தடிகளும்,

" அறந்தா ளியற்று மவனினுங் கோடி யதிக மில்லந்
துறந்தா, னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன் " என்றார்.

இவைகளால் நின்ற ஐயந்தெளிந்து, உள்ளத்துறவடைந்த நாயனாரைப் பழுதற்ற முழுஞானியென்னத் தடைபடமாட்டாது. இவை கருத்தாகவே, நாயனாரும்

" மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின் " என்றார்.

நாயனார் இச்சமையாதீத நிலைமையையே கொள்ளவேண்டிய தாவசியகமென்று உலகத்துக்கு எடுத்துப் போதித்து தாமும் அந்நிலைமையில் நின்றொழுகிக் காட்டினாராவர்.

இன்னமு மதனுண்மையை யுன்னில், அவராற் போதிக்கப்படும் நிலைமையில் அவரே நில்லாராயின், அவரையும் அவர் கூறியுள்ள வேதவிதிகளையும், பிறர் மதித்துக்கொள்ளமாட்டார்களென்பதுறுதி. அப்படி யில்லாமல் உலகமுழுவதும் நாயனாரையும் நாயனாராற்பிறந்த

வேதவிதிகளையும் மதித்துக்கொள்ளாதா ருண்டென்று சொல்வதற் கில்லாவண்ணம், எந்தத் தேசத்தாரும் எந்தச் சமையத்தாரும் மிகப் பெருமையாக மதித்து, அற்பமும்நழுவவிடாமல் முழுவது மொப்புக் கொள்ளப்பட்டு வளர்பிறை மதியம்போல மென்மேலும் கீர்த்தி யோங்கி வளர்ந்துவருகின்ற உண்மை, நாயனார் சமையாதீத நிலையி னின்றாரென்பதற்குப் போதியசான்றாகும்.

அன்றியும், நாயனார், மருள்கெடுத்தெழுந்த அருட்குண நிலை மையையும் நாயனாரது அருள்வாக்காற் பிறந்த திருக்குறளின் அருட் பெரு நிலைமையையும் இனைத்தெனை அளத்தற் கின்றியமையாத தாகவே, பின்வருங் காரணங்களால் விளங்கும்.

அதாவது:—நாயனாரது திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை விரிக்கத்துணிந்த காலத்தில், உண்மையுரை விளங்காமல், மயங்கிப் பின் மெய்ஞ்ஞான யோகசமாதியிலிருந்து கண்டும், அவ்வழியே ஒவ் வொரு குறளுக்கும் உரை யெழுதப்புகுந்தோரும் யோக சமாதியி லிருந்தே கண்டாரெனப் புலப்படுகின்றது. இவ்வாறு தவத்தார் காணத்தக்கதான அருள்கொண்டெழுந்தது திருக்குறள். அத் திருக் குறளை யருளிச்செய்தார் நாயனாரென்றால் திருக்குறளின் தெருட் குண நிலைமையையும் நாயனாரின் அருட்குண நிலைமையையும் இனைத் தெனக்காட்ட எவ்வாறியலும்?

இங்ஙன மினைத்தெனை அளத்தற் கியலாவண்ண முயர்ந்த அருட் குணக் கடலாகிய நாயனார், தாம் மெய்ம் முறையான நிலைமையிலே நின்றும் உலகத்துக்குத் தாம்செலுத்தவேண்டிய கடமையை, உலக மெல்லாம் இகலோக பரலோக வின்பங்களை யெளிதிற் பெறும்படி களிக்கத்தக்க ஞான நெறியை யுலகியலெனக்கொண்ட குறள் வேதத் தின் வழியே போதித்துச் செலுத்தி நின்றமையால், நாயனாரை, உலகம் சீர்திருத்தி யிகபரசுகம்பெற அருள்செய்யத்தக்க வேதம் விளக்குவானாக அவதரித்துவந்த சமையாதீதக்கடவுள் ஞானிய ரெனக் கொள்ளுதலே நேராகுமென்று துணிந்துரைக்கின்றேன்.

---

## அடக்கமுடைமை.

புத்திமானனவனுக்கு தன்னுள்ளேயே ஓர் சிறந்த ராஜ்ய முண்டு. அந்த ராஜ்யத்திற்கு அறிவு என்பவன் அரசனாவான். அவ்வரசனுக்கு அந்தக்கரணங்களே ஏவலாளர்களாவர். அந்த

ராஜ்யமானது பார்வைக்குச் சிறியதாய்க் காணப்பட்ட போதிலும், அதின் அரசன் மிகுந்த செல்வாக்கும் ராஜரீகமு முள்ளவனுப்ச் சக்கிரவர்த்தியிலு மேலாவான். ஆயினும் நம் முன் ராஜ்யத்தில் நடக்கும் கலகங்களைப் போன்று அந்த ராச்சியத்திலும் அந்தக் கரணத்திற்கும், அறிவிற்கும், ஒற்றுமையின்றி கலகம் விளைந்துகொண்டேயிருக்கும். இவைகளுள் எது மேற்கொள்ளுமோ அதற்குத்தக்கபடி தான் நாம் நல்லோராவதும், தீயோராவதும். நாம் இந்திரிய நிக்ரஹஞ்செய்து, அதை அறிவோடு இணங்கச்செய்ய வல்லோமாயின், அதைப் போலப் பேரின்பம் வேறொன்றில்லை. பகைவரது கூரிய அம்பினும் அடங்காப்புலன்களே கொடியனவாம். அவற்றிற்கு நாம் ஆட்பட்டிருத்தலானது, பகைவரிட்ட பெரு விலங்கினுங் கொடியது. தன்னைக் குடிகெடுக்கும் நெஞ்சிற்கு குற்றேவல் செய்யின் பிடிபடுக்கப் பட்டகளிறு. இயற்கையிற் கோபமுள்ள ஒருவன் எப்பொழுதும் சான்றோ ரினத்திருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதினுல் அவன் எளிதில் நற்குண முள்ளவனுகலாம். ஸகவாசமானது மிகவும் முக்கியமானது. அதனுல் நமது குணமும் ஒழுக்கமும் விருப்பமும் நம்மை யறியாமலே சீர்படும். ஒருவன் தன்னை யடக்கி யாள்பவனுயின் அவன் இவ்வுலகத்தை யாள்பவனுவான். நாம் மற்றவர்களை யடக்கி யாள்வதினும் நம்மையே அதிகமாக அடக்கி யாளவேண்டும்.

பிறரிழைத்த சிறு பிழைகளை எண்ணுமல் மறப்பதே நன்று; அவற்றை மறப்பதினுல் உயர்ந்தோராவோம். மறவாமல் தீங்கு செய்தவர்க்குத் தீங்கிழைப்போமாயின், அவரினு மிழிந்தோராக வேண்டும். சான்றோர்கள் ஒருவரிடமுள்ள தூர்க்குணங்களைக் கவனியாது, நற்குணங்களையே கைக் கொள்வர்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ் வார்ப் பொறுத் தற்றலை.

சினமானது மனதிற் குள்ளே உண்டாகிற ஓர் வகையான ஜ்வரமாம்; ஜ்வரம் நீங்கிய பின்பு தூர்ப்பல முண்டாவது போலவே, சினங்கொண்டவர்களுக்கும் அது நீங்கிய பின்பு தேகத்தில் பலக்குறைவுண்டாகும். இந்திரியங்களை யெல்லாம் ஒருங்கே யடக்கி ஆள்வது சிலருக்கு அதிக வருத்தமாயினு மவர்க ளவற்றை ஒருவாறு பொருந்தும்படிச் செய்ய முயல்வது நன்று.

மிகைபடக்கூறும்படி வழக்கப்படலாகாது. நமது நாவினின்றும் வார்த்தைகள் வெளிப்படுமுன்னமே அவற்றை ஆராய்ந்து

பார்த்தறிந்து சொல்லவேண்டும். முன்னாடியே யோசித்துப் பாரா விடில் பின்னிட்டு வார்த்தைகள் நமது நாவினின்றும் வெளிப்படா திரா.

காவாதொருவன் தன் வாய் திறந்து சொல்லும் சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால் —ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையர் எஞ்ஞான்றும்
காய்ந் தமைந்த சொல்லார் கறுத்து.

நமது சினம் செல்லு மிடமு முண்டு, செல்லாத இடமு முண்டு. நம் மினும் மேலானோரைச் சினந்து கொள்ளுதல் மடமை. கீழானோ ரிடத்தில் செலுத்துதல் அதினும் இழிவாகும்.

அறிவினும் இந்திரியங்களே முற் பிறந்தவை. எப்படி யெனின், நாம் பிறந்து கொஞ்சகாலத்திற்குள் இந்திரியங்களோடு பழக்கமடை ந்து விடுகிறோம். நாம் அறி வுடையராதற்குப் பிறந்து சிறிது காலம் செல்லுகிறது. (அதாவது ஆன்மா இந்திரிய வாயிலாய்ச் சென்று வெளி விடயங்களை யுணரக் கொஞ்சகாலமே செல்கிறது. அறிவின் பிரகாசம் வெளிப்படவோ நாட் செல்கிறது.) இந்திரியங்களை அவற் றின் போக்கின்படி விடாமல் அடக்கிக்கொள்ளவேண்டும். ஓர் கோட்டையை பிடித்துக் கொள்ளுவதிலும் அந்தக்கரணங்களை யெல் லாம் நமது வசமாக்கிக் கொள்ளுதலே மிகச் சிறந்தது. "ஆசையற்ற வனே தனிகன், தன்னைத் தானடங்கப் பெற்றவனே பெரியோன், மரணத்தை ஆனந்தத்தோடு எதிர் பார்ப்பவனே சந்தோஷமுள்ள வன், மற்றவைகளைப் பற்றியோ வெனில் கவலைப்படேன். மேற் சொன்ன மூன்றனுள் முற்கூறிய இரண்டைப்பற்றிக் கூட நான் அத் தனைக் கவலைப்படேன். மூன்றாவதைப் பற்றி எவ்வளவு கவலை வைத்திருப்பினும் தகும்;" என்று ஆன்றோர் மொழியுண்டு.

கோபம் வரும்போதே அதைவேரோடு களைந்துவிடவேண்டும். ஆரம்பத்தில் அப்படிச் செய்யாவிட்டால் அது வேர்க்கொண்டு விருத் தியாகி, ஆதியில் நகத்தாற்கிள்ளி எறிவதைப் பின்பு கோடரிகொண்டு வெட்டுவது போலாகும். எவ்விடத்தில் அறிவும் நீதியும் ஆள்கின்ற னவோ அங்கே அமைதியும் ஸமாதானமும் பெருகும். அடக்கமுடை யோரிடம் ஆனந்தம் குடி கொள்ளும். மிதமான செல்வமும் பெருந் தன்மையு மிருந்தால் அவ்விடத்தில் அச்சமாவது பொறாமையாவது சிறிதேனு மிரா. இப்படி வாழ்ந்திருத்தலே இன்புற்று வாழ்ந்திருத் தல் எனப்படும். பொல்லாங் கிழைத் தற்காக அதிகாரத்தை வகிக்க விரும்புவார்களும் சிலர் உண்டு.

ஒன்றைப்பற்றி வாதிக்கும்போது ஆத்திரத்தோடும் அகங்காரத் தோடும் பேசலாகாது. ஏனெனில் உண்மை பகைவருடைய எதிர் வாதத்தினும் தன்னை வாதிப்பவர்களின் சினத்தீயினால் அதிக மாய் வருந்தும், ஆத்திரப்படாமல் அமர்ந்து பேசினால் மட்டுமே உண்மை விளங்கும். நாம் அந்தக்கரணங்களை யெல்லாம் நமது வச மாக்கிக்கொண்டால் மட்டுமே நமக்கு மனநிலை யுண்டேயன்றி அவற் றிற்கு உள்படுவதினாலல்ல. மேலும் செல்வம், பலம் இவற்றால் மன நிலையுண்டாகாது. அடக்கமானதும், கபடமற்றதும் உருக்கமுடையது மான மனமே நிலைபெறச்செய்யும். மூத்தோர் வார்த்தையைக் கொள் ளாது எக்கருமத்திலும் நாம் பிரவர்த்திக்கலாகா. இளமைப் பருவ மானது எவ்வேலையையும் எளிதில் முடிப்பதற் கேற்றதென்றாலும், யோசனையில் மூத்தோர் சொல் வார்த்தையே அமிர்தமாகும்.

(இன்னும்வரும்.)

---

## அதிவீர ராமபாண்டியன்.

இவர் முற்காலத்தே மதுரையிலிருந்து அரசாண்டு வந்த சந்திர வம்ச பாண்டிய அரசருள் ஒருவர். இவரைப் பிள்ளைப் பாண்டி யன், குணசேகரவழுதி, வல்லபதேவர் எனவும் கூறுவதுண்டு. இவர் இருந்து அரசாண்ட விடம் கொற்கையேயாம் (மதுரைக் கரு கில் ஒரூர்). இவரது தந்தையார் திருநெல்வேலிப் பெருமாள் குல சேகர பாண்டியர். பெரிய தந்தையார் பராக்கிரமன் குலசேகர பாண்டியர். இப் பெரிய தந்தையாருக்கு குணராம பாண்டியரென் றும், வரதுங்கராம பாண்டியரெனவும் இருபுதல்வர்கள் உண்டு, எனக் கொங்கு சரிதத்தால் வெளியாகிறது.

இவர் தஞ் சகோதரரில் ஒருவரான மேற்கூண்ட வரதுங்கராம பாண்டியரோடு சுவாமிநாத தேவர் என்பவரைக் குருவாகக்கொண்டு கலைபயின்று இளமையிலேயே தென்மொழி வடமொழிகளில் தேர்ந் தவர். இவர் அரசராகவும் புலவராகவும் விளங்கித் தம் ஆட்சி யோடு கூட உலகத்தோருக்கு உறுதி பயப்பனவாய் வடமொழிக் கண் விளங்கும் காவியங்களையும், புராணங்களையும், வேறு தனி நூல்களையும், செந்தமிழில் மொழி பெயர்த்துச் சிறந்த கவிகளாற் பாடி யிருக்கின்றனர்.

இவர் பாடிய நூல்களாவன:—வெற்றிவேற்கை, காசிகாண்டம், இலிங்கபுராணம், கூர்மபுராணம், பிரமோத்திர காண்டம், வாயுசங்

கிதை, கொக்கோகம், மதனக்கோவை, நைடதம், திருக்கருவை வெண்பா, திருக்கருவை யந்தாதி, முதலிய நூல்களாம்.

இவர் அரசும் இடனும்—பாண்டியர்கள் நெடுங்காலந் தொட்டு கொற்கை யென்னும் நகரத்தில் வசித்து வந்தனரென மதுரைப் புராணம் கூறுவதானும் இவ் வதிவீர ராம பாண்டியர், தாமியற்றி யுள்ள நறுந்தொகை யென்னும் வெற்றி வேற்கையில்,

வெற்றிவேற்கை வீரராமன்
கொற்கையாளி குலசேகரன்புகல்
நற்றமிழ்தெரிந்த நறுந்தொகைதன்னாற்
குற்றங்களேவோர் குறைவிலாதவரே

என்றதனாலும், இப் பாண்டியரும் தம் முன்னோரைப் போலவே கொற்கையி லிருந்தாரெனவும் கோற்கையாளி என்றதனால் இவர் முதலில் ஓர் சிற்றரசராயிருந்து கொற்கைமாநகரத்தை யாண்டா ரெனவும் அக்காலத்தே தான் இவ் வெற்றிவேற்கை யியற்றி யுள்ளா ரெனவுங் கொள்ளக் கிடக்கின்றது.

மேலும் வடமொழிப் புலவரான ஸ்ரீ ஹர்ஷகவியார் இயற்றிய நளசரிதமான நைஷதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் புலவர்க்கவுடதம் போன்ற விருத்தப் பாக்களாற் பாடியவரும் இவரே. அந்நூலின் சிறப்புப்பாயிரத்தே ஆக்கியோன் பெயரில்,

நிலவுபொழி தனிக்கவிகை நிடதர்கோன் புகழ்சரித
நெடுநீர் வைப்பிற்
புலவர்களி யமுதொழுகு புதுமொழிகூட்டுணத் தமிழாற்
புனைதல் செய்தான்
வலனுயர்த்த வண்ணலஞ்சேல் வான்றொடுபொற்றோட்
டிமய வரையிற் றீட்டி
அலர்தலை மாநிலம்புரக்கு மதிவீரராமனிக
லரசரேறே

என்னும் கூற்றால்.

சிற்றரசராய்க் கொற்கையிலிருந் தாண்டுவந்த இவர் வரவர இமயந்தொட்டு கன்னியாகுமரிவரையுள்ள விடங்களையெல்லாம் தம் சுவாதீனமாக்கிக்கொண்டு மற்றைய தேசத்தரசர் தமக்குத் திறை கொடுக்கப் பெற்றிருந்தனரெனத் தெள்ளிதிற் புலனாகிறது.

இவர் ஆக்ஷியில்

பரிசனம்பகைவர்கள்வர் படர்தருமுயிர்கடானென்
றுரைசெயைந்திடத்திலு முலகிடையிடையூறெய்தா

வரிசையிற்காத்து நீதிவழுக்கினர் தம்மையொத்திக்
கரிசறப்பொருளுங்கோடல் காவலரியற்கைமைந்த

என்று கூறும் விநாயகபுராணத்தின்படி தம் முலகைக்காத்து பரிபாலித்துவரும் பளுவைச் சுமந்தும் அதனைப் பொருட்படுத்தாதும், ச்ரமங்கொள்ளாதும், அரும்பெருங் கல்வித்துறைகளிற் படிந்துப் பஞ்சகாவியங்களையும் பலநூல்களையும் பழுதறக்கற்றுத் தமிழில் பலகாவியங்களியற்றிய கல்விவள்ளல், என்று நன்கு விளங்குகிறது.

மேலும் இவர் இளமையிலேயே சிற்றின்பப் பிரியராயிருந்து வினைவயத்தால் அதனையே மெய்யின்பமாகக் கருதியொழுகி, அதனியல்பெலா முணர்த்துங் கோக்கோக ரிஷியாற் செய்யப்பட்ட கொக்கோக நூலைத் தமிழில் மொழிபெயர்த்து அப்பெயர் சாத்தியும் இந்திரபுரி படலத்திற் கூறியுள்ள மதனாகமவியல்களை யெடுத்து மதனக்கோவை யெனப் பெயர்சூட்டி ஓர் நூலியற்றி தம் சகோதரர் பெயரால் வெளியிட்டனரென அகராதி கூறியவாறே, இவர் சிற்றின்பவியலைச் செவ்வனேயணிந்து விளக்கும் ஜீவக சிந்தாமணி யென்னும் பெருங்காப்பியத்தே பெரிதும் பிரியங்கொண்டாராய்ப் பயின்றனரென்பது இவர்செய்த நைடதத்தால் நன்குவிளங்கும். சிந்தாமணி காவியத்தேகண்ட பலமொழிகளைத் தாஞ்செய்த நைடதத்தில் நுழைத்துப் பொருந்தப் பாடியுள்ளார். அவற்றில் முக்கியமான இரண்டொன்றைக் காட்டுவோம்.

சிந்தாமணி நகர்வளம் கோயில் வருணனை 145-வது பாட்டு

சங்குவிம்மு நித்திலஞ் சாங்தொடேந்து பூண்முலைக்
கொங்குவிம்மு கோதைதாழகூந்தலேந்து சாயலார்

என்பதில் இரண்டாமடியை நைடதம் கைக்கிளைப்படலம் 1-வது பாட்டில்.

கொங்குவிம்முகோதையோடு கோதைதாழவாண்முகம்
பங்கயத்தை மற்றோர்பங்கயத்து வைத்தபான்மைபோல்

என முதலடியில் பொருத்தியிருத்தல் காண்க.

சச்சந்தன் சரித்திரம், 244-வது பாட்டில்

..................................................................
..................................................................
எண்ணமின்றியிரங்கி யிவ்வையகந்
தண்ணந்தாமரை யாளொடுதாழ்ந்ததே

என்பதின்நான்காமடியின் முதற்சீரை நைடதம் நாட்டுப்படலம்

8-வது பாட்டில் தண்ணந்தாமரை சொரிந்த வெண்முத்தமும் எனவும், சிந்தாமணி சீவகன் உற்பத்தி 346-வது பாட்டில்கண்ட,

> தூவியஞ்சிறை யன்னமுந் தோகையும்
> மேவிமென்புன மானினமாதியா
> .........................................................
> ... ............................................ .....

என்பதில் முதலடியை நைடதம் அன்னத்தைக் கண்ணுற்ற படலம் 47-வது பாட்டில்,

> தூவியஞ்சிறையனந் துயிலுநாண்மலர்
> வாவியுட்டாமரை வளையந்தோன்றுவ

என முதலடியிற் பொருத்தியும் பாடியுள்ளார்.

இதுபோல் இன்னமும் எண்ணிறந்தன வாகையாற் சிந்தாமணியிற் கண்ட பதங்களை நைடதத்தில் ஆங்காங்கு பொதிந்து நிறைந்துகிடக்கின்றன.

இதனுலிவர் பாலியம் முதல் சிற்றின்பப்பிரியரா யிருந்துவந்த காலத்தே காமவொழுக்க மிகுதியால் தொழு நோய்பற்றி யதனையாற்ருது வருந்தி யிறுதியாய் திருக்கருவை க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யிராநின்ற சிவபெருமான் மீது வெண்பா வந்தாதிகள் பாடித் துதித்து அந்நோய் நீங்கப்பெற்று பின்னர் இறைவன் திருவடி தொழுமின்பமே மெய்யின்பமெனக் கருதி அருந்தவங் கிடந்தனரெனவும், இணங்கா மனைவியரையிணக்கி இல்லற சகடத்தை யிழுத்து உலகோர் வீட்டுநெறி பெறச்செய்யும் உபாயத்தில் இவர் மிக்க வல்லுநர் என்றும் சில சரிதங்கள் விளக்கிக் காட்டுகின்றன.

இதனுல் இவர் அபாரமான விப்பூபாரம் சுமந்தும், கலைக்களஞ்சியம் சேர்த்தும் சிற்றின்ப நோயால் வாடியும், இல்லறச்சேற்றில் வழுக்குண்டு விழுந்துபுரண்டும், இவற்றின் இயல்களையும் இழுக்குகளையும் தொந்தரைகளையும் செவ்வனே அனுபவித்துத் அவைகளின் பயன்களை யறிந்தும் இறுதியாய் இன்பத்தவங் கொண்டொழுகினுர் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது.

இவருக்கு வித்தியாகுரு சுவாமிநாததேவரும் தீட்சாகுரு அகோர சிவாசாரியாருமாம். சேதுபுராணஞ்செய்த நிரம்பவழகிய தேசிகர் இவருக்கு ஆசிரியராயிருந்தாரெனச் சிலர் கூறுநிற்பர்.

இவரதுகாலம் ஆக்ஸ்போர்டு என்னும் நகரத்திலிருந்த சமஸ்

கிருத பாஷா விற்பன்னராகிய ஹோரெஸ்ஹேமன் வில்சன் துரையவர்கள் சாசனங்களைக் கொண்டாராய்ந் தெழுதிய பாண்டிய இராஜாங்கம் (கிங்க்டம் ஆப் பாண்டிய)என்னும் சரித்திரநூலிலே தமிழ்க் கல்வியிலே பாண்டியன் என்னும்பெயர்தான் ஒரு பிரபலமான பெயர். மேல்படி பாண்டியராஜனை அதிவீரன் அல்லது அதிவீர ராமபாண்டியன் என்று சொல்வதுண்டு. அவர் வடமொழியிலிருந்து அநேக நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த் திருக்கிறாரென்று கிரிஸ்துவருஷம் 1049-க்குச் சரியான சாலீவாகன சகாப்தம் 973-ம் வருஷத்திலே அவர் பிரபலித்திருந்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அது சரிதானென்று ஒப்புக்கொள்ளத் தக்க திருட்டாந்தங்களு மிருக்கின்றன என்று கூறியிருக்கின்றன ராதலால், கி. பி. 11-வது நூற்றுண்டாகிய இன்றைக்கு 867-வருஷங்களுக்கு முன்னரே அதிவீரராமபாண்டியர் ஆக்ஷியின் காலமாம் என்று கொள்ளக்கிடக்கிறது.

---

## ஒற்றுமை.

### அகவல்.

1. உலகந் தன்னிலே உயர்ஜன்ம மானதோர்
நலமுறு மானிட நற்றிரே கந்தனை

2. மன்னிய சிறப்புடன் மாண்புட னடைந்த
நன்னில மாந்தர்காள்! நலமுறு சீலர்காள்!

3. இருவரே யாயினும் இல்லத்தோ ராயினும்
திருவுமூ ராயினும் தேசமே யாயினும்

4. அகிலமே யாயினும் அரசரே யாயினும்
பகைமை யென்னும் படுவிஷம் நீக்கின்

5. ஒற்றுமை யேதரும் உலகோர்க் கின்மை
பற்றுள வாணி பசுமாத் தெய்தலும்

6. வானுற வோங்கி வளம்பெற வளரும்
ஆணிவே ரின்மரம் அடையும் சிறப்பும்

7. பஞ்சபாண் டவர்கள் பண்புட னுலகில்
அஞ்சா தன்று அடைந்த வெற்றியும்

8. தங்களு ளொற்றுமை தானது வின்றேல்
அங்கவர் வெற்றி அடைதலு முண்டோ?

9. ஆதலால் நேயரே! அகமகிழ் இந்திய
மாதின் மகிழ்வுறு மன்னிய மதலைகாள்!

10. பாரினில் நந்தாய் பண்புடன் களிக்க
சீரிய ஒற்றுமை சிறப்புட னடைவமே.

---

## திருவள்ளுவரும் ஞானவெட்டியும்.

ஞானவெட்டி யென்ற நூலை அநேகர் திருவள்ளுவர் இயற்றியதாக வெண்ணியிருக்கின்றனர். நாயனுரது நூலைக் கையாளாதார் ஒருவருமில்லை. இந்த ஞானவெட்டி யென்பதைக் கல்வியாளர் எவருமே கையாள்வதில்லை. எந்த நூலிலும் இதை மேற்கோளாக உபயோகிப்பதில்லை. எந்தப் பிரசங்கியாரும் இதிலிருந்து ஆதாரமாக ஒரு பாட்டையேனும் கூறுவதில்லை. ஏனெனில் இது திருவள்ளுவர் இயற்றியதல்ல வென்பதனுலேயே.

இது நாயனுராலியற்றப்பட்டதல்ல வென்பதைப்பற்றி ம-ா-ா-ஸ்ரீ டி. வி. சதாசிவப் பண்டாரத்தார் என்பவர் தக்க அத்தாட்சிகளோடு ஆகஸ்ட் மாதம் 4௳ வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகையில் பிரசுரித்திருக்கிருர். அது கீழ் வருமாறு:—

(செந்தமிழ்.)

நமது தமிழகஞ் செய்த தவப்பயனுகத்தோன்றித் திருக்குறளென்னும் தெய்வப்பனுவலை யருளிய ஆசிரியர் திருவள்ளுவனுரின் அருமை பெருமைகளை யறியாதார் மிகவுஞ் சிலரேயாவர். இப்பெரியோர் அருளிய திருக்குறளை, அதுதோன்றிய நாண்முதல் எம்மதத்தினரும் தம்மதத்திற்குரிய நூலென்று கூறிவருவதுடன், தமிழ்மொழி வழங்காப் பிறதேயத்தினரும் அதனை நன்கு படித்துத் தத்தம் பாஷைகளில் மொழிபெயர்த்து மிகப்பாராட்டியும் வருவாராயினர்.

இம்மகானது தெய்வப் புலமையையும் இவரருளிய நூலினருமையையும் நன்குணரப்பெருதமாந்தர் சிலர், இன்றைக்கு இரண்டு மூன்று நூற்ருண்டுகளுக்குள் இயற்றப்பட்டு வெளிவந்துள்ள "ஞானவெட்டி" யென்னும் நூலைக்கண்டு மயக்கமுற்று இந்நூலியற்றிேனும் திருக்குறளருளிய திருவள்ளுவனுரென்றே உண்மையறியாமற் கூறிவருகின்றனர். அன்னேர் கூற்றுவலியுடைத்தாவென்பதை யீண்டாராய்வாம்.

ஞானவெட்டியின் ஆசிரியர், ஆரியத்திலும் தமிழிலும் ஒப்பற்ற புலமையும் தெய்வத் தன்மையும் வாய்ந்த சில பெரியோர்களையும், அன்னேர் நம்மவர்கட்குப் பெரிதும் பயன்படும் வண்ணம் இயற்றி யருளிய நூல்களையும், பொருமை செருக்காதி குறும்புகள் விளைப்பதாய் முக்குணக்கடை நிற்குந் தாமத குணச்சேட்டையாலோ அன்றிப் பிறிதென்கொண்டோ, தம் நூலில் வாய்கூசாது நிந்தித்திருக்கின்றனர். அச்செய்யுட்களைக் கீழே தருகின்ரும்.

வியாசர்சொல்லும் பாரதத்தில் வெகு பொய்வீணும்
மேதினியோர் மாய்கையினில் விருப்பஞ்சொன்னுர்
சாய்ந்து கவிபாடிவிட்டான் கம்பன்வம்பன்

அதித ராமாயணத்தி லநேகம் பொய்தான்
ஆயாம லதிவீர பாண்டியன்சொல்லும்
தமயந்தி சரித்திர நைடதமுஞ் சொன்னார்
சுயமாகா நதிகவிகள் சுத்தப் பொய்தான்
தொடுகவி மாணிக்கவாசகர் சொன்னாரே. (ஞான வெட்டி 579)

தேவாரமான திருவாசகத்தைச்
செகத்தோர்கள் படித்து மெத்தத்தியங்கினார்கள்
பேயானவாண்டிகட்குப் பிழைப்புக்காகப்
பேசிவைத்தார் மற்றொன்றும் பிசகேயில்லை. (ஷை 600)

மேலே வரைந்துள்ள செய்யுட்களில் வியாசர்பாரதமும் கம்பர் இராமாவதாரமும், அதிவீரராமபாண்டியர் நைடதமும், சைவசமயாசாரியர் நால்வரும் திருவாய்மலர்ந்தருளிய தேவாரதிருவாசகங்களும், மக்கட்குப் பயன்படாப் பொய்நூல்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள், இராமாவதாரமியற்றியருளிய கம்பர், (1120 கி. பி.—1200 கி. பி.) கி. பி. 12-ஆம் நூற்றாண்டினிடையில் விளங்கியவராதல் வேண்டுமென்று சேது ஸம்ஸ்தான வித்வான் ப்ரம்ம ஸ்ரீ உ. வே. ரா இராகவையங்கார் செந்தமிழ் 3-ஆம் தொகுதி 6-ம் பகுதியில் நிரூபணஞ் செய்துள்ளார். தமிழில் நைடதமியற்றி யருளிய அதிவீரராம பாண்டியரே, கூர்மபுராணம், இலிங்கபுராணம், வாயுசங்கிதை, காசிகாண்டம் முதலிய நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்துப் பாடியருளிய அரசரேறென்ப இம்மன்னர் பெருமான், சகம் 1486 ல் தென்காசியில் முடி சூட்டப் பெற்று சகம் 1514 வரை ஆட்சி புரிந்தனரென்று தென்காசிக் கோயிற் கோபுரத்திற் காணப்படுஞ் சிலாசாசனங்கள் அறிவிக்கின்றன

ஆகவே, இவ்வரசர் கி. பி. 16-ஆம நூற்றாண்டினிறுதியில் (கி. பி. 1564—கி. பி. 1592) வாழ்ந்தவராதல் வேண்டும். இனி திருக்குறளருளிய திருவள்ளுவர் தம்நூலை அக்காலத்தே தென்மதுரை யகத்துத் தமிழுக் கரசராய் வீற்றிருந்தருளிய மூன்றாஞ் சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரது முன்னிலையி லரங்கேற்றி யுள்ளாரென்பது, அச்சங்கத்துச் சான்றோர் அதனைத் தங்கள் செவியாரக் கேட்டு மனமார வுவந்து வாயாரப் புகழ்ந்து பாடியுள்ள திருவள்ளுவமாலைப் பாடல்களால் நன்கு விளங்கும். மூன்றாஞ்சங்கம் கி. பி. 2-ம் நூற்றாண்டிலும் அதற்கு முந்திய காலங்களிலும் நின்று நிலவியதாகலின் அச்சங்கத் திறுதிக் காலத்தில் தம் நூலை யரங்கேற்றிய திருவள்ளுவனாரும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் விளங்கியவராகற்பாலர். இது காறுஞ் செய்த வாராய்ச்சியால், திருக்குறளருளிய திருவள்ளுவனார் கி. பி. 2-ம் நூற்றாண்டிலும், இராமாவதாரமருளிய கம்பர் கி. பி. 12-ம் நூற்றாண்டினிடையிலும், நைடதமியற்றிய அதிவீரராம பாண்டியர் கி. பி. 16-ம் நூற்றாண்டி னிறுதியிலும் வாழ்ந்தவர்களென்பது நன்கு வெளியாதல் காண்க.

இதனால், கம்பரும் அதிவீரராம பாண்டியரும் திருவள்ளுவனார்க்குப் பல நூற்றாண்டுகட்குப் பிற்பட்டவர்களென்பது இனிது விளங்கும். ஆகவே,

மேற்கூறிய கம்பரையும் அதி வீரராம பாண்டியரையும் தம்ஞானவெட்டியில் நிந்தித்துப்போந்த ஆசிரியர் திருக்குறளருளிய திருவள்ளுவரென்று கூறல் சிறிதும்பொருந்தாதென்க.

அன்றியும், திருக்குறளுக்குச் சிறந்தவுரைவரைந்தவரும் இருபெரு மொழியினும் நுண்மாணுழைபுலன் படைத்த பேரறிவாளருமாகிய ஆசிரியர் பரிமேலழகர் நம் தெய்வப்புலவரியற்றிய வேறு நூல்களிருப்பின் திருக்குற ளுக்குத் தாம் எழுதியவுரையில், அந்நூல்களிலிருந்து ஆங்காங்கு மேற்கோள் கள் எடுத்துக்காட்டி ஆசிரியர்கருத்தை விளக்கிச் செல்வார். அவர் அங்ஙனம் எடுத்துக் காட்டாமையால் நமது பெருநாவலர் திருக்குறளைத் தவிர வேறு நூலொன்றும் இயற்றினரில்லை யென்பது நன்கு புலனும்.

இனி, ஞானவெட்டியின் ஆசிரியர் தம் நூலிற் சில பெரியோர்களை நிந் தித்திருப்பதுபோல் வேதத்தையும் அந்தணரையும் பல் காலும் நிந்தித்திருக் கின்றனர். நமது திருவள்ளுவனார் அங்ஙனம் செய்யாரென்பது,

"அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுகலான்"

(3-வது அதிகாரம் 0.)

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" (14-வது 4)

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்" (53-வது 3)

"ஆபயன் குன்றுமறு தொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்" (56-வது 10) என்னும் குறள் வெண் பாக்களா னினிது விளங்கும்.

இனி, ஞானவெட்டியுடையார் தம் நூலில் தம் பெயர் திருவள்ளுவ ரென்றும், தாமே 1300 குறள் வெண்பாக்களையுடைய திருக்குறளியற்றி வைத்தவரென்றும் கூறியிருத்தல் ஈண்டு கவனிக்கத்தக்கது. இவ்வாசிரியர் திருவள்ளுவரென்னும் பெயருடையவரா யிருக்கலாம். ஆனால் திருக்குற ளைத் தாமியற்றியதாகக்கூறல் சிறிதும் பொருந்தாது. தம்மைத் தத்துவங்க ளுணர்ந்த சிறந்தஞானியென்றும் தம் நூலே உலகிற்குப் பயன்படக்கூடிய அரிய நூலென்றும் வாய்ப்பறை சாற்றிச்செல்கின்ற இவ்வாசிரியர் இங்ஙனம் பொய் கூறற்கு எங்ஙனம் துணிவுற்றனரோ அறியேம். அன்றியும், உலகிற் குபகாரமாய்த் திருக்குறளைத் தாமியற்றி வைத்ததாகச் சிறிதும் அஞ்சாது பொய் கூறுகின்ற இந்நூலுடையார்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

"உள்ளத்தாற் பொய்யா தொழுகினுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்"
"மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை"
"யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற"

என்னும் குறள்வெண்பாக்களைச் சிறிதும் படித்தறிந்தவராகக் கூடத் தோன்ற வில்லையே யென்று மிக வருந்தவேண்டியதா யிருக்கிறது.

இந்நூலுடையார் மருத்துவ முறைகளிற் சிலவற்றையறிந்துள்ளா ரென்ப துண்மையே. ஆனால் அருமையும் பெருமையும் வாய்ந்த பழைய நூலாகிய திருக்குறளைத் தாமியற்றியதாகக் கூறினால் அக்கூற்றைத் தமிழகத்தினர் அங்கீகரிப்பாராவென்று ஆராயாது இங்ஙனங் கூறியது அவரது அறியாமை யின்பாற் படுமேயன்றிப் பிறிதின்றென்க. அன்றியும் இவரியற்றிய ஞான வெட்டி யென்ற நூலில் எத்தனையோ செய்யுட்கள் பிழை யுடையனவாகக் காணப்படுகின்றன.

இனி, 'ஞானவெட்டி' என்னும் சொற்றொடரில்,' வெட்டி, யென்பதின் பொருள் வழியாம். தஞ்சை ஜில்லாவிற் கடலைச்சார்ந்த பிரதே சங்களில் வழியை வெட்டி யென்று இன்றும் வழங்கி வருகின்றனர். ஆகவே இந்நூலும் அப்பிரதேசங்களில், இன்றைக்கு இருநூறு வருடங்கட்கு முன் னிருந்த ஒருவரா லியற்றப் பெற்றதாதல் வேண்டும்.

இது காறுங் கூறியவாற்றால், ஞான வெட்டியை யியற்றினோர் திருக் குறளருளிய திருவள்ளுவனா ரல்லரென்பதும் அந்நூல், இன்றைக்கு இரு நூறு வருடங்கட்கு முன்னர், தஞ்சை ஜில்லாவிற் கடலைச் சார்ந்த பிரதேசத் திருந்த ஒருவரா லியற்றப்பெற்ற தென்பதும், தெய்வப்புலமைத் திருவள்ளுவ னார் திருக்குறளைத் தவிர வேறொரு நூலும் இயற்ற வில்லை யென்பதும் நன்கு விளங்கி நிற்றல் காண்க.

" பெருநூல்களாயிரத்தைந்நூறிந்நூல்
முன்னமே யான்பாடி விட்டேனுயிரத்து முந்நூறு
முடித்து வைத்தேன் குறளது வாயுல கோர்க்காண்டே" (ஞானவெட்டி 1737.)

(இனியேனும் நம்மவர் அந்த ஞானவெட்டி யென்னும் நூல் நாயனாரியற்றியதல்ல வென்பதையும் அது கற்றோரால் அங்கீகரிக்கத் தக்கதல்ல வென்பதையும் நன்குணர்வார்களென நம்புகிறோம்.)

## சசிவர்ண போதம்

இச்சரிதையை யெழுதியனுப்பும் பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர் அவர்களது சுகக்குறைவால் இம்மாதம் விஷயம் நம்மிடம் வர ஆலசியமாய் விட்டதால் மறு சஞ்சிகையில் வெளிவரும் என்று தெரிவித்துக் கொள்கிறோம். (ப-ர்.)

## ஞான இரகசியம்

(46-வது பக்கத்தொடர்ச்சி)

அதாவது நமக்கு கன்மம் இல்லாதிருக்கும்போது முதல்முதல் ஜென்மம் எப்படி வந்தது என்ற கேள்விக்கு முன்னோர் என்ன சமாதானத்தைக்கொண்டு திருப்தி யடைந்தார்கள் என்பதே.

இப்போது உலகில் ஒரு மனிதனுடைய இரகசியத்தை வேறொருவன் அறியவேண்டுமாயின் எவ்வளவோ கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஒருவன் லண்டன் என்ற பட்டணம் உலகில் இல்லை, இருந்தால் காட்டு என்கிறான். அவனுக்கு இருக்குமிடத்திலிருந்தே அதைக்காட்ட யாரால் முடியும். பணத்தைச் செலவழித்து கப்பலிலேறிச் சென்றால் லண்டன் நகரைக் காண்பானென்பது உண்மை. இப்போது நாமறிய முயல்வது தேவரகசியம். மேலும் அது ஸ்தூலப்பொருளல்ல. அதற்குப் பொறுமையோடு எவ்வழியில் முயலவேண்டுமோ அவ்வழியில் முயன்றால் அறியலாகும். பெரியோர் அவ்வாயிலாய்ச் சந்தேகந்தெளிந்தே முமூட்சுநிலையில் அமர்வாராயினர்.

விவேகானந்த சுவாமிகள் தமக்குத் தகுதியான ஆசானைத் தேடிக்கொண்டிருந்த காலத்தில் யாராவது ஒருவர் மெய்ஞ்ஞானி, மகான், சாது என்று கூறப்படுவதைக்கேட்டதே அம்மகானிடம் சென்று நமஸ்கரித்து “ சுவாமி, தாங்கள் கடவுளைக்கண்டீர்களா?” என்று கேட்பாராம். இவ்வாறு பலரைக்கேட்பாராம். கடவுளைக் கண்டீர்களா என்ற அபாரமான கேள்வியைக்கேட்டதே ஒவ்வொருவரும் அச்சங்கொண்டு இல்லை யில்லையென்று கூறிவிட்டார்களாம். கடைசியில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரைக்கண்டு அவரிடம் இதேகேள்வியைக் கேட்டபோது அவர் உடனே அஞ்சாது “ ஆகா, கண்டேன் ” என்றாராம். விவேகானந்தர் “ நானும்காண ஆசைப்படுகிறேன் எனக்கும் காட்டமுடியுமா ? ” என்றார். பரமஹம்ஸர் “ ஆகா, நான் கூறும் சொற்படி நடந்துகொண்டால் காணலாம் ” என்றாராம். அதுமுதல் விவேகானந்தர் அவரையே யாசானாகக் கொண்டார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதைப்போல் பொறுமையோடு எவ்வாறு முயற்சி செய்யவேண்டுமோ அவ்வாறு செய்தால் மேல் கூறப்பட்ட சந்தேகத்தை நிவர்த்திசெய்துக் கொள்ளலாம்.

பீஜகணிதத்தில் (Algebra) (Equation) சமீகரணம் என்ற ஒரு பகுதியுண்டு. அதில் மதிப்பு தெரிந்த எண்களைக்கொண்டு ஒரு புது எண்ணின் மதிப்பையறிதல். எவ்வாறெனின்.

$$\frac{க^2+த^3+ட^3}{த+ட+க}=(க^2+த^2+ட^2)\ க. \quad ஆனால்$$

'க' வின் மதிப்பென்ன ? என்று இம்மாதிரி ஒரு கேள்வி.

இதில் 'க' வின் மதிப்பை யறிவதற்காக ஆரம்பத்தில் ஏதோ ஒருதொகையை உத்தேசமாய் வைத்துக்கொண்டு அதாவது க. என்பதின் மதிப்பு 1. என்று வைத்துக்கொண்டு முறைப்படி கணக்கைப் போட்டால் க. என்பதன் உண்மை மதிப்பு முடிவில் விடையாய் வந்துவிடும்.

அப்படி பொறுமையோடு ஒப்புக்கொண்டு சரியான விடையைக் கண்டுபிடிப்பதைவிட்டு, ஆரம்பத்திலேயே க. என்பதற்கு 1 என்று ஏன் உத்தேசித்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டால், அப்படி செய்தால்தான் உண்மை மதிப்பைக் கண்டறியக்கூடும் என்பதே அதற்கு விடை.

அதைப்போலவே பரிசுத்தமான கடவுளிடத்தில் பிரக்ருதி என்ற மாயை யெப்படி யுண்டாயிற்றென்றும், கர்மம் செய்யுமுன் ஜன்மம் எப்படி வந்ததென்றும் இப்போதே யறியவேண்டும் என்ற ஆத்திரத்தை யொழித்து, அதற்கு எவ்வாறு முயலவேண்டுமோ அவ்வாறு முயற்சிசெய்யவேண்டும். உலகில் "போட்டவிடத்தில் தேடினால்தான் (கைசேர்ந்தபொருள்) அகப்படும்" என்ற ஒரு பழமொழி சாதாரணமாய் வழங்கக் காண்கிறோம். இப்போது மாயை தோன்றிய விடத்தைக்கண்டால் அப்போதுதான் மாயையின் இலட்சணமும் அது எவ்வாறு உற்பத்தியாயிற்றென்பது தானேவிளங்கும். அதிலேயே கன்மம் முன்பா, ஜன்மம் முன்பா என்ற கேள்வியும் அடங்கி யிருப்பதால் அந்த சந்தேகமும் நிவர்த்தியாய்விடும். யாருக்கு கன்மபலன் சொல்பமாயிருந்து இச்சென்மத்திலோ அல்லது சமீபமான பின்ஜன்மத்திலோ ஞானம் கிட்டக்கூடுமோ அத்தகையோர்க்கு இத்தகைய சமாதானத்தால் திருப்தியுண்டாகி அவர்கள் இக்கவலையை யொழித்து மேல் ஞானத்தை யடையவேண்டிய வழியில் முயல்வார்கள். மற்றப்படி நெடுங்காலம் ஞானம் கிட்டக்கூடாத விதமான தீயகன்மப்பலனை யதிகமுடையோர்க்கு திருப்தியும் உண்

டாகாது, ஞானப்பயிற்சி செய்யப்போதுமான நுண்ணறிவுமிராது. கன்மத்திற்கு ஞானத்தை யொருவர் அடையாதபடிசெய்யச் சக்தி யுண்டோ வென்பதைப்பற்றி பிற்பாகத்தில் கூறப்படும்.

இனி பிதுர்க்களுக்கு நாம் செய்யும் கிரியைகளால் பயனுண்டா வென்பதைப்பற்றி யறியவேண்டுமாயின் ஜனனக்ரமத்தை முன்பு அறிந்துகொள்ளல்வேண்டும். அதுவருமாறு:—

(பின்வரும்விஷயம் நமது உபனிடதங்களில் கூறப்பட்டிருக்கிறது)

மனிதன் ஆயுள் 120 என்று கணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் தன் கர்மத்திற்கிடாய், பிறந்த வினாடிமுதல் எந்த நிமிடத்திலும் மரிக்கலாகும். கர்ப்பத்திலேயே மரிக்கலுமாகும். இவ்வாறு மனிதன் மரிக்கும்போது அவன் தேகத்தைவிட்டு எதெது வெளியில் செல்கிறது அதாவது தேகத்தைவிட்டுப் பிரிந்துபோகிறது என்று அறிவோம்.

தேகத்தை விட்டு மூன்றுபொருள்கள் வெளியேகுகின்றன. அவையாவனவெனில்:—

1. ஆன்மா.
2. நாம்செய்த கன்மம்.
3. ஆன்மாவோடு இக்கன்மத்தைப் பொருத்திவைக்கும் பசை போன்ற ஆவரணம் என்பது. இதற்கு மாயையென்றும், காரண சரீரமென்றும் பெயர்.

இவ்விதம் ஆன்மா பிரியும்போது ஒரு அபூர்வசம்பவம் நடைபெறுகிறது. அதாவது மரணம் என்பது ஒரு ஆழ்ந்த குழியென்று வைத்துக்கொள்வோம். ஆன்மா அக்குழியின் ஓரத்தில் காலை வைத்து மறுகாலைத் தூக்கும் சமயம் அதாவது மரணம் நேரிடப் போகும் கடைசிசமயத்தில் ஒருவன் பிறந்ததுமுதற் செய்த நன்மை தீமையாவும் ஒன்றுவிடாமல் செய்தவரிசையின்படி அவன் மனதின் முன்தெரியும். இது எவ்வாறெனின் ஒரு நியாயாதிபதி குற்றவாளிக்குத்தண்டனை விதிக்கும்சமயம் "நீ செய்தகுற்றம் இன்னின்னவை" யென்று கூறியபின்பே தண்டனை விதிப்பதுபோல்.

மனிதன் செய்யும் கன்மம் மூன்றுவிதம். 1. புண்ணியம். 2. பாபம். 3. இரண்டுங்கலந்த மிசிரமகன்மம்.

எவ்வாறெனின் நாம் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் செய்யும் கன்மங்களில் இம்மூன்றுவிதங்களு முள.

திருட்டாந்தம்: —

(1) ஒருவன் கோயிலுக்குச்சென்று சுவாமி தரிசனம் செய்யக் கருதுகிறான். அவன் ஏகாக்கிரசித்தத்தோடு அங்கசுத்தி செய்து கொண்டு மனதைக் கடவுள் சிந்தனையிலேயே நிறுத்தி நேராய்க் கோயிலுக்குச்சென்று சுவாமியைவணங்கித் துதித்துவிட்டுத் திரும்பி வழியில் சந்தித்த ஏழைகளுக்குப் பாத்திரமறிந்து தன்னாலியன்ற தருமம்புரிந்து வீட்டிற்குத் திரும்புகிறான். இது சுத்த புண்ணியத் தொழில்.

2. ஒருவன்கையில் ஒரு கட்கத்தை யெடுத்துக்கொண்டு இரவு 10-மணிக்குப் புறப்பட்டு ஊர் ஓரத்திலுள்ள பாதையில் நின்று தனியாய்வரும் ஆளை வழிமறித்து "உன்னிடமுள்ள சொத்தைக் கொடு. இன்றேல் இவ்வாளால் வீசிவிடுவேன்" என்று பயமுறுத்தி அவனிடமுள்ளதைப் பறித்துக்கொள்கிறான். இது சுத்தபாபம்.

3. முதல் கூறப்பட்டவன் கோயிலுக்குச் சென்று சுவாமியைச் சேவிக்கும்போது அங்கு கும்பாலத்தியெடுக்கும் தேவடியாளைக்கண்டு மயக்கமுற்று கடவுளைமறந்து "ஆ, இவள் வனப்பே வனப்பு. இவள்வீடு யெங்கோ தெரிந்துகொண்டு இன்றே செல்ல வேண்டும்" என்று சிந்திக்கிறான். இது புண்ணியத்தில் பாபம்கலந்த மிசிரமகன்மம்.

இரண்டாவது கூறப்பட்ட கள்ளன் வழிமறித்துக் கொள்ளையடித்துக்கொண்டு திரும்பிவரும்போது வழியில் ஒரு யாசகன் கண்டு "ஐயா, நான் மூன்றுநாளாய் பட்டினிகிடக்கிறேன். என் பசி நோயை நீக்கினால் பெரும்புண்ணியம் என்கிறான். இதைக்கேட்ட கள்ளன் மனமிரங்கி தன் களவாடியபொருளில் அவனுக்குக் கொஞ்சம் தானம்செய்கிறான். இது பாபத்தில் புண்ணியம் கலந்த மிசிரம கன்மம்.

மூன்கூறியவாறு மரணச்சமீபத்தில் ஒருவன்செய்த கன்மமனைத்தும் மனக்கண்ணுக்குப் புலப்பட்டதே அக்கன்மங்கள் மேற் கூறிய மூன்று வகுப்பாய்ப் பிரிக்கப்படுகின்றன. இந்த அனுபவம் நேரிட்ட பின் ஒருவன் மரணத்தினின்று தப்புவது மிக்க அபூர்வம்.

இவ்வாறு கன்மம் மூன்றாய்ப் பிரிந்தபின், மிசிரமகன்மம் நீங்கலாக, மற்ற சுத்த புண்ணியம், சுத்தபாபம் என்ற இரண்டில் ஒன்றை யனுபவிக்க வேண்டியதற்குத் தகுந்த ஜன்மத்தில் அவன் சேர

வேண்டிநேருகிறது. அந்த இரண்டில் எதில் இவன்மனம் ஆதிகமாய் ஊன்றியிருந்ததோ அதை முன்னாடி யனுபவிக்க நேரிடுகிறது. ஒருவன் பாபகிர்த்தியங்களிலேயே மனம் அதிகமாய் ஊன்றியிருந்தால் மனிதனிலும் தாழ்ந்த ஜெனனங்களில் முன்னே செல்லவேண்டும். ஆகையால் முன்கூறியபடி எல்லா கன்மங்களும் தோன்றிய மறுவினாடியே இவன் பாபத்திற்குத் தக்க விதமாய் எந்த ஜனனமெடுக்கும்படி ஆண்டவன் அமைக்கின்றாரோ அந்தப்பிராணியின் உருவம் இவன் கண்முன் தோன்றுகிறது. நாயோ, கழுதையோ, மாடோ பன்றியோ எதுவோவொன்று. அவன் அவ்வுருவத்தையே யுற்று நோக்குகிறான். அப்போதே அவனுக்கு இவ்வுலகம் மறந்து அந்த உருவம் கனவுபோற் றோன்றுகிறது. உடனே ஆன்மா இத் தேகமாகிய கூட்டைவிட்டு அந்த உருவமாகிய கூட்டிற்பாய்ந்து விடுகிறது. புழுவைப்போல் ஆன்மா வேறொரு உருவைப்பற்றியே இருக்கும் உருவாகிய கூட்டைவிடும். அது ஒரு காலைப்பூமியில் ஊன்றியபின் மற்றக்காலைத் தூக்குவதுபோலாம். அச்சமயத்தில் (மரணத்தருவாயில்) இவனைச் சூழந்திருப்போர் இவன் கண் நிலைக்கண்படுவது சுவாசம் அடங்குவது முதலான குறிகளைக் கண்டு பிராணன் போகிறதென்று கூக்குரலிட்டழத் தொடங்குகிறார்கள்.

(தொடரும்)

---

## மாணவர் பக்கம்

### சீர்திருத்தம்.

சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று நமது நாடு முழுதும் இப்போது ஒரு பெருங் கிளர்ச்சி யுண்டாயிருக்கிற தென்பது யாவருமறிந்த விஷயமே. ஆனால் அச் சீர்திருத்தம் எவ்வாறென்பதைப் பலர் பலவாறு கூறுகிறார்கள். அச்சீர்திருத்தத்தோடு கௌரவமும் சேர்ந்தே யிருக்கிறது. சிலர் அன்னியரைப் பார்த்து எந்த விஷயத்திலும் அவர்களைப் பின்பற்றுவதே சீர்சிருத்தமென்று நினைக்கிறார்கள். இலௌகிக விஷயத்தில் தங்கள் தேசாசார மதாசாரத்திற்குத் தக்க விதமாய் சீர்திருத்த மடைந்திருக்கும் ஐரோபியரைக் கண்டு அவர்களை எந்த விஷயத்திலும் பின்பற்றுதலே சீர்திருத்தமென்றும் கௌரவமென்றும் சிலர் எண்ணி யவ்வாறே நடக்கின்றனர். இவர்கள் உண்மையில் கௌரவம் என்பது என்னவென்பதைச் சிந்தித்தறிவதே யில்லை. கௌரவம் என்னும் பூஷணம் நமக்கு

நாமே செய்து போட்டுக்கொள்வதல்ல. நமது ஒழுக்கத்தால் அது அன்னியரால் நமக்கு அணியப்படுவது.

இப்போது திருட்டாந்தமாய் ஒன்று கூறுகிறோம். ஒரு பிராமணர் அவரிலும் தாழ்ந்த வகுப்பானான ஒருவேளாளனிடம் மிக்க சினேகம் கொண்டிருக்கிறார். வேளாளன் அவரைக்காணும்போது மரியாதையாய் நமஸ்கரிக்கிறான். பிராமணர் வேளாளன் வீட்டிற்கு வந்தால் "சுவாமி நமஸ்காரம், உட்காருங்கள்! சுவாமிக்கு ஒரு மணையைக் கழுவிக்கொண்டு வந்து ஆசனம் போடுங்கள்—சுவாமி! தாகத்திற்குப்பாலாவது மோராவது வேண்டுமா" என்று வேளாளன் உபசரிக்கிறான். அவர் சற்று தூரத்திலிருந்தாவது அயல் ஊரிலிருந்தாவது வந்தவராயின், "பசியாயிருந்தால் சமீபத்தில்பிராமணாள் ஹோட்டல் இருக்கிறது. போசனத்திற்கு ஏற்பாடு செய்கிறோம். இன்றேல், சாமக்கிரியை பாத்திரங்கள் யாவுமளிக்கிறோம். குளக்கரையில் சமைத்து அருந்துங்கள்" என்று பலவிதமாய் மரியாதையோடு உபசாரம் செய்கிறான்.

இது எதுவரையில்? அந்தப்பிராமணர் பிராமண ஆசாரத்தை விடாமலிருக்குமட்டுமே. அவர் "நான்சீர்திருத்தமடைந்துவிட்டேன், உங்கள் வீட்டில் வேண்டுமாயினும் சாப்பிடுவேன்" என்று சாப்பிடத் தொடங்கிவிட்டாலோ, அன்றே வேளாளனுக்கு அவரிடமிருந்த மரியாதையும் பக்தியும் எங்கோ பறந்துபோய்விடும். பிறகு அவனே "அந்தப்பாப்பானா—பிராம்மணனா அவன்," என்று இழிவாய்க் கூறுவானேயன்றி, "ஆ! அவர் சீர்திருத்தமடைந்த அந்தணராயிற்றே" யென்று ஒருபோதும் கூறமாட்டான்.

இதைப்போலவே, தனக்கென்றுள்ள ஆசார ஒழுக்கங்களை யொருவன் இகழ்ந்து அன்னியஜாதியினுடைய ஆசார ஒழுக்கங்களைக் கைப்பற்ற எப்போது முயலுகிறானோ, அப்போதே அந்த அன்னியஜாதியான் "ஓகோ, இவன் தேசாசார ஒழுக்கங்கள் தாழ்ந்தவை யாதலால் இவன் நம்மைப் பின்பற்றுகிறான்" என்று நினைப்பதோடு "சே இவன் என்னதான் செய்தாலும் நமக்குச் சமதையாவானா" வென்று அகங்காரமும் இவன்மேல் ஒருவிதவெறுப்புமடைகிறான். ஐரோப்பியனைப்போல் நடிக்கமுயலும் ஒரு இந்தியனை ஐரோப்பியன் கௌரவமாய் நினைக்கிறான் என்று சிலர் எண்ணி அப்படியே நடக்கின்றனர். இது தவறான அபிப்பிராயம். நடையுடைபாவனைகளில் தன் தேசாசாரத்தையும் மதாசாரத்தையும் கைவிடாதிருக்கும் ஒரு இந்தியனிடம் அந்த ஐரோப்பியனுக்கிருக்கும் மதிப்பு, தன்னைப்போல் நடிக்கும் இந்தியனிடம் ஒருபோதும் இராதென்பது அனுபவம். கௌரவம் இன்னதென்பதும் அகௌரவம் இன்னதென்பதும் தெரியாமல் நம்மை மயங்கச்செய்யும் இச் சீர்திருத்தத்தை இலௌகிக சீர்திருத்தம், வைதீக சீர்திருத்தம் என்று இருபிரிவாய் வகுக்கலாகும்.

1-வது:—இலௌகிகச் சீர்திருத்தம்: உண்ணல், உடைதரித்தல், மணம்புரிதல், கௌரவமான தொழில்செய்தல், தொழில்முறைமையை யறிதல், முதலிய பலவிதங்களா யிருக்கின்றன.

2-வது:—வைதீகச்சீர்திருத்தம்: கோயிலுக்குப்போதல், தெய்வ வழிபாடுசெய்தல், தம் மதக்கொள்கையைப் பரவச்செய்தல், கடவுள் நிலைமையை யுள்ளபடியறியும் நெறியைக் கடைப்பிடித்தொழுகல், முதலியனவாம்.

இவை யிரண்டிலும் 1-வதான இலௌகிக சீர்திருத்தத்தில்மட்டுமே நாம் மேல்நாட்டாரிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டியவைகள் சிலவிருக்கின்றன. இப்போது நம்மவரிற் பலர் இந்த இலௌகிக சீர்திருத்தங்களில் எவை நமது க்ஷேமாபிவிர்த்திக்கு அவசியமோ, எவற்றால் கௌரவமும் செல்வமுமடைந்து மற்ற நாட்டாரைப்போல் நாமும் முன்னுக்குவரலாகுமோ, அவற்றை யடியோடு விட்டுவிட்டு எவற்றால் நமக்கு அகௌரவம் நேரிடுமோ, எவற்றால் அன்னியருக்கு நம்மிடமுள்ள மதிப்பும் மரியாதையும் குறையுமோ அவற்றையே பின்பற்றுகிறார்கள்.

ஜடசாத்திரங்களில் மேல் நாட்டாரே தேர்ச்சி யடைந்தவர்களென்று நம்மவரில் அனேகர் நம்பியிருக்கிறார்கள். கொஞ்சகாலத்திற்குமுன்பு ஏறக்குறைய யாவருமே யவ்வாறு தவறு யபிப்பிராயங் கொண்டிருந்தார்கள். ஆனால் வரவர காலக்ரமத்தில் நமது முன்னோர்க்கு வைத்திய சாஸ்திரம், வானசாஸ்திரம், கணிதம் பீஜகணிதம், கோணசாஸ்திரம், கிருஷிசாஸ்திரம் முதலியயாவும் தெரிந்தேயிருந்த தென்றும், பெரும்பாலான சாஸ்திரங்கள் ஈஜிபட், கிரீஸ் முதலிய வழியாய் இந்தியாவினின்றே மேல் நாட்டிற்குச் சென்றனவென்றும், சில காரணங்களால் அவை பிறந்த விடத்தில் வரவர மறக்கப்பட்டுப்போயின வென்றும் ஐரோப்பியராலேயே பெரும்பாலும் கண்டு பிடிக்கப்பட்டது. ஆயினும், நம்மில் இன்னும் அனேகர் பழைய அபிப்பிராயத்தையே கொண்டு எல்லாவிஷயங்களிலும் மேல் நாட்டாரைப் பின்பற்றி நடத்தலே கௌரவமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலௌகிக ஆசாரசீர்திருத்தத்தில் எதை நாம் கைக்கொள்ள வேண்டுமோ அதை விட்டுவிட்டு, தகாத ஒழுக்கங்களைக் கைப்பற்றுவது பயனற்றதேயாகும்.

உடை.—உடுப்பணிதல் அந்தந்தத் தேசத்திற்குத் தக்கவாறு யமைந்திருக்கிறது. ஐரோப்பாகண்டம் மிக்க குளிர்தேசம். அத்தகைய தேசத்திற் பிறந்தோரே, கொடிய குளிர்காற்று மார்பில் தாக்குவதால் மரண மடைகின்றனர். ஆகையால் அவர்கள் தடித்த உடைகளையும், கம்பளி, நார் முதலியவற்றால் நெய்யப்பட்ட துணிகளாலான உடைகளையுமணிந்துகொள்ள வேண்டி

யது அவசியமாயிற்று. நம்மைப்போல் வேஷ்டி யுடுக்காமல் காற்சட்டை தைத்தணிவதும் இக்காரணங்கொண்டே. மேலும் அத்தகைய உடைகளின் விலையும் அதிகம். அவற்றைத் தைப்பதற்குக் கொடுக்கவேண்டிய கூலிக்கே நாம் ஒரு ஜதை வேஷ்டி வாங்கிக் கொள்ளலாம். நமது நாடு குளிர்தேசமல்ல. அதற்கு மாறாய் உஷ்ணதேசம். இந்த நாட்டிற்குப் பருத்தி நூற்சீலையே தகுதியானது. பருத்தி உஷ்ணமும் சீதளமுமின்றி சமமானது. பட்டு சற்று உஷ்ணமானது. இவை யிரண்டும் நமது நாட்டில் ஏராளமாய்க்கிடைக்கும் ஐரோப்பியரைப்போல் நாம் செல்வமுடையவர்களல்ல. இவ்வாறிருக்க நாம் உடுக்க வேண்டிய ஆசாரத்தை விட்டு அவர்களைப் போல் உடுத்திக்கொள்வதில் பயனென்ன. அவர்கள் குழந்தைப் பருவமுதல் மரணமட்டும், வீட்டிலும், வெளியிலும், இலௌகீகச் சடங்கிலும் எப்போதும் காற்சட்டை யுடுத்திக் கொள்ளுகிறார்கள். நம்மவர் அவ்வாறு செய்ய முடியுமோ. முடியாதென்பதை யனுபவமாய்க்காண்கிறோம். காற்சட்டை யணிந்தால் மேஜோடும் பூட்ஸும் அணிந்து கொள்வதே ஒழுங்கு. காற்சட்டைமட்டும் மாட்டிக்கொண்டு மற்றவை அவர்களைப்போல் அணியாத நம்மவரைக்கண்டால் அவர்கள் பரிகாசம் செய்து நகைக்கிறார்களேயன்றி வேறில்லை. அவர்கள் ஆசாரப்படி அவர்கள் பூட்ஸோடு கோயில் முதலிய பரிசுத்தவிடங்களுக்கும் செல்லலாம். நமது ஆசாரத்திற்கோ அது விரோதமானது. ஆகையால் நாம் சற்று நேரம் காற்சட்டையும் சற்று நேரம் வேஷ்டியும் உடுக்கவேண்டும். அதாவது நமது ஆசாரத்தை அடியோடொழித்து அந்த ஆசாரத்தைக் கைப்பற்ற முடியாது. இவ்வாறு நிலையாய் எப்போதும் அனுகூலமாயிருப்பதை விட்டு அநாவசியமாய் நீடித்து நிற்காத ஆசாரத்தை அதிகவிலை கொடுத்து ஏன் வாங்கிக்கொள்ள வேண்டும். அவர்களில் யாசகனும் காற்சட்டையே யுடுத்திக் கொள்கிறான். நம்மவரோ பணமிருக்குமட்டுமே காற்சட்டை மேஜோடு பூட்ஸ் அணியமுடியும். அப்புறம் பழைய கந்தனே கந்தன் என்று நாலுமுழம் துண்டையே சுற்றிக்கொள்ள வேண்டும். ஆகையால், இத்தகைய சீர்திருத்தம் ஒருபோதும் நமக்கு நிலையாகா தென்றுணர வேண்டும்.

(தொடரும்)

## சிறுவர்களுக்குரிய சில நன்மொழிகள்

(1) இனியமொழி பேசுவதினால் உனக்குச் செலவொன்றுமில்லை யென்பதை நீ யறிவாய்; ஆனால் அதிகமதிப்புண்டு.

(2) இன்று உன்னால் செய்து முடிக்கக் கூடியதை நாளைக் கென்று ஒத்திவைக்காதே.

(3) ஊக்கமாக இருந்துழைத்துவா. மனத்தைத் தளரவிடாதே. அது கேடுதருவதாம்.

(4) ஒரு போதும் காலத்தை வீணாக்காதே. காலத்தின் அருமை சுறு சுறுப்புடையவனுக்கே தெரியும்.

(5) துரதிர்ஷ்டமுள்ள ஒருவனைக் கண்டபோது நீ அவனை இகழாதே.

(6) ஏழை மனிதனைக்கண்டு நீ நிந்தியாதே, அவனுடைய துரதிர்ஷ்டமே அவனிடம்நம்மைப் பரிதாபப்படும்படி செய்கின்றதன்றோ.

(7) நீ எப்போதும் பரிசுத்தமாயிரு, மரியாதை கொடுத்து மரியாதை யடை. நீ பிறரைபவமதித்தால், நீ யவமதிப்படைவாய்.

(8) உனக்கு அவசியமில்லாதவைகளில் நீ பணத்தைச் செலவிடாதே.

(9) நீ உன்னுடைய மனத்திற்கு எப்போதும் ஊக்கங்கொடுத்துக் கொண்டிரு.

(10) வாய்விட்டுச் சொல்வதில் மிதமாக இரு; ஆனால் செய்கையில் அதனை அதிகமாகக்காட்டு.

(11) ஒரு பொழுதும் சோம்பேறித் தனமாயிராதே.

(12) நீ ஒருவனோடு பேசும்போது அவன் முகத்தைப்பார்த்துப் பேசு.

---

## துஷ்டன்யார்?

(431-ம் பக்கத்தொடர்ச்சி.)

சூக்குமப்பொருளான சத்குண துர்குணத்தை யநுபவமாய் உணர்ந்தொழுக பராபரவஸ்துவாம் கடவுள் பாரில் பல்வேறு ஜீவ ஜெந்துக்களைத் தூலப்பொருளாய் விளங்க சிருட்டித் திருக்கின்றனர். மண்ணிற்பிறந்த மானிடர்களாகிய நமக்கு ஜீவனார்த்தத்தின் பொருட்டு அனேக மிருகங்களைப் படைத்திருக்கிறார். காட்டகத்தே வசிக்கும் துஷ்ட ஜெந்துவாகிய சிங்கம், புலி, பாம்பு, தேள், சில பக்ஷி முதலானவைகளையும் ஓர் பயன் கருதியே படைத்திருக்கிறார். அவற்றின் குணகுணங்களைச் சுலபத்தில் உணர்ந்து உலகத்தில் விவேகியாய் மேன்மையுறப் பெருவாழ் வடையலாகும். நாம் ஒவ்வொரு தூலப் பொருள்களின் செய்கை, குணம், நடக்கை முதலியவற்றைக் கண்டறிந்து, இவையெல்லாம் நம்முடைய பிரயோசனத்தின் பொருட்டன்றோ இவ்வாறாய் சரீராதி குணங்களோடு பிறந்திருக்கின்றன வென்பதைச் சிறிது ஊகித்து நம் மநுபவமாய் நிலை நிறுத்திகொள்வோமானால் எல்லையிலா வானந்தத்தில் மூழ்கி க்ஷேமமாய் இம்மை வீட்டில் வாழ்ந்தும், பிறகு மறுமைவீட்டில் இன்புற்றுமிருக்கலாம். தூலப்பொருளைக் கொண்டன்றோ சூட்சுமப்பொருளை யறியவேண்டும். ஆகையால் தூலதுஷ்டன் சுவாபவத்தை முதலில் என்னவென்று ஆராய்வோம். துஷ்டனானவன், தெய்வமகிமைக்

கும் இராஜநீதி ஆக்கினைக்கும் சிறிதும் அஞ்சமாட்டான். அவன் பாவமிது புண்யமிது என்று அறிந்துகொள்ள அறிவில்லாதவன். யாவரிடத்திலும், அலக்ஷியம், டம்பம், பெருமை தன்வீரம் முதலியவற்றைக் காட்டித்திரிவான். தன் வல்லமையே பெரிதென ஒவ்வொரு காரியத்தையும் செய்யத்துணிவான். "கொடிய செய்கை செய்வது பாவம். ஐயோ! ஏன் இப்படி பழிபாவம் சம்பாதிக்கிறாய். எல்லாரும் கெட்டவன் எனப் பேரெடுக்கிறாய்" என்று யாராவது மனமிரங்கி நல்வார்த்தையாடினால், அவர்களுக்கே பல இடையூறுசெய்து பெரும்பகை நினைத்து தன்னைத்தானே புகழ்ந்திருப்பான். மேலும் மனம், சொல், செய்கை இம்மூன்றும் அவனிடத்தில் வேறுபட்டிருக்கும். பெரியோர் விதித்த நீதிவிதிகளை விட்டு, விலக்கிய அநீதிகளைச் செய்யவல்லவன். உலக வழக்கத்தைப்போல ஒரு விஷயமும் முறையே அறிந்து செய்ய மனமில்லாதவன். அகங்காரத்தை வளர்த்து அறிவை அழித்துக் கொள்பவன். சதா மனவேதனை யுடையவன். காரணமின்றி யார்க்கும் துன்பஞ் செய்பவன். அவனுக்குத்துன்பமே இன்பமாகும். அவனைக்காண யாவரும் வெறுப்புற்று அஞ்சுவர். அங்ஙனமாகும் அவன் முன் யாராவது துஷ்டனிவனென்றால் அக்கணமே அவருயிரை அந்தகன் கையிற் கொடுப்பான். இவற்றையெல்லாம் கருதியன்றோ நமது முன்னோர்கள் துஷ்டனைக் காட்டில் திரியும் மிருகங்களுக்கு சமானமாகக்கொண்டனர். துஷ்ட மிருகங்களைக் கண்டால் ஒதுங்க எல்லையுண்டு. அவனுக்கு எல்லையே யில்லை. மேலும்,

ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்தவிடங் கொடுக்கில் வாழுமே—நோக்கின்
பைங்கணரவிற்குப் பல்லளவே தூர்ச்சனர்க்கு
அங்கமுழுதும் விடமேயாம்.

என்றபடி ஒவ்வொரு ஜெந்துவுக்கும் விஷம் ஒவ்வோரிடத்தில் ஏற்பட்டிருக்கிறது. தூர்ச்சனனுக்கோ இடம் குறிப்பிடவில்லை. அவனுக்கு அங்கமுழுவதும் விஷமாயிருக்கிறது. துஷ்டன் பகுத்தறிவில்லாத அச்செந்துக்களைக் காட்டிலும் இழிந்தவனாகிறான்.

இத்தகைய சுபாவமுள்ள குணங்கள் முன்னிலைத் துஷ்டனிடம் இருக்க, இதேபோல் தன்னிலை துஷ்டனிடத்தில் இருக்கிறதாவென நோக்குவோமாயின், சிறிது நாணத்தோடு விளங்கும். அதுமுதல் நாம் இன்பமே யநுபவிப்போம். அந்நிலையே தன்னைத்தானறியும் ஞானமாகும். தன்னைத்தானறியாத வரையில், நமக்கு துன்பமேயன்றி இன்பமில்லை. மானிட ஜென்மம் எடுத்ததற்கு பிரயோசனமும் சுகமும் அதுவேயன்றி பிறிதொன்றில்லை. ஆகையால் நாம் இனியேனும் புறங் கூறிக்கொண்டு லோக நிந்தையில் துன்புற்றிருக்காமல் நமது குற்றத்தை நாமே ஆய்ந்தோய்ந்து நோக்கி மேலும் மேலும் மேதாவியர்களது ஆசீர்வாதம் பெற்று ஞானமுண்டாகப் பெருமான் பேரருள்புரிவாராக.

## சாக்கடல்.

பூகோளப்படப் புத்தகத்தில் ஆசியத்துருக்கியின் படத்தைத் திருப்பிப் பார்த்தால், அதில் கிறிஸ்துநாதரது சம்பந்தத்தால் பரிசுத்தமானதென்று கருதப்படும் பாலெஸ்தின் நாட்டில் சாக்கடல் இருப்பதைக் காணலாம். பிரசித்தி பெற்ற ஜெருஸெலம் பட்டணம் இதற்குச் சமீபத்தில்தான் இருக்கிறது.

ஆங்கிலத்தில் இந்தக்கடல் டெட்ஸீ (Dead sea) என்று கூறப்படுகிறது. அதற்குத் தமிழே சாக்கடல் என்பதும். அந்தக் கடல் நீர் உயிர்ப் பிராணிகள் ஒன்றும் வாழமுடியாதபடி அத்தனை உவரா யிருப்பதால் அதற்குச் சாக்கடல் என்ற காரணப் பெயர் வந்தது போலும்.

இதனை ஒரு பெரிய ஏரியென்றே சொல்லவேண்டும். மற்றக் கடல்களுடன் எவ்வித சம்பந்தமும் இன்றி பாலஸ்தின் நாட்டின் மத்தியில் இருப்பதால் இது கப்பற் போக்குவரவுக்காவது வியாபாரத்துக்காவது அநுகூலமாயில்லை. இது தெற்கு வடக்காக 47 மைல் நீளமும், மிகவும் அகலமான இடத்தில், கிழக்கு மேற்காக 10 மைல் அகலமும் இருக்கிறது. இது சமீபத்திலுள்ள மத்தியதரைக் கடலின் மட்டத்தைவிட 1300 அடி தாழ்ந்திருக்கிறது.

இதைப்பற்றிப் பாலஸ்தின் நாட்டிலேயே பலவாறான கதைகள் கூறப்படுகின்றன. இந்தக் கடற்கரைக்கருகே உயிர்ப்பிராணிகளும் புற்பூண்டுகளும் கூட வாழ்வதில்லையென்று ஜெருஸெலத்தில் உள்ளவர்கள் கூறுகிறார்கள். இந்தக் கடலின்மீது சில இடங்களில் பறவைகள் பறந்து செல்கின்றன. ஆனால் மச்சங்கள் வாழ்வதில்லை.

இந்தக் கடலின் நீர் மிகுந்த கனமாயிருப்பதால் அதில் மனிதர் நீந்துவது கஷ்டம். முதுகின்மீது மல்லாந்து மிதப்பது சுலபம். இதில் ஸ்நானம் செய்வோர் ஜலம் கண்ணுக்குள் பிரவேசியாதபடி ஜாக்ரதையா யிருக்கவேண்டும் இதன் ஜலத்தில் மருந்துப் பொருள்கள் மிகுதியாய் அடங்கியிருப்பதால் இதில் ஸ்நானம் செய்தல் நன்றென்று சொல்லுகிறார்கள் பாலஸ்தின் துருக்கியைச் சேராததாயிருந்தால் சாக்கடலின் வடகரை சுகத்திற்காகப் பலரும் ஸ்நானம் செய்யக்கூடிய ஒரு பெரிய ஸ்நானத்துறையாக ஏற்பட்டிருத்தல் கூடும்.

சாக்கடலின் ஜலம் மிகவும் கனமானது. உலகத்திலே வேறெந்தக்கடலின் நீரும் இத்தனை கனமாயில்லை. காஸ்பியன் கடலில் ஒருடன் ஜலத்தில் 11 பவுன் உப்பு இருக்கிறது பால்டிக் கடலில் ஒருடன் ஜலத்தில் 18 பவுன் உப்பு; கருங்கடலில் ஒருடன் ஜலத்தில் 29 பவுன் உப்பு; அத்லாந்திக் மகாசமுத்ரத்தில் ஒருடன் ஜலத்தில் 31 பவுன் உப்பு; இங்கிலாந்துக்கும் ப்ரான்சுக்கும் இடையிலுள்ள இங்கிலீஷ் கால்வாயில் ஒருடன் ஜலத்தில் 72 பவுன் உப்பு; மத்யதரைக்கடலில் ஒருடன் ஜலத்தில் 85 பவுன் உப்பு; செங்கடலில்

தில் ஆசாரமென்பது இன்னகருத்தால் ஏற்பட்டது என்று விளங்கா மையினால் சகலமும் நழுக விட்டுவிட்டார்கள். லூவிஸ்கூனியும் மற்ற இதர டாக்டர்மார்களும் இதைப்பற்றி அநேக கிரந்தங்கள் ஏற் படுத்தி யிருக்கின்றார்கள். அவர்கள் சொல்லும் தந்திரங்கள் பூராவும் நமது ஆசாரத்தில் அடங்கி யிருக்கக் காணலாம். சுரங்களுக்கு கீழ் தேசத்து டாக்டர் ஒருவர் சொல்வதாவது ஆகாரமில்லாம லிருந்தால் இரண்டு மூன்று நாட்களில் சுரம் நீங்கிவிடுமென்கின்றார். ஒரு தவமே. நம் தேசத்திலும் லங்கணம் பரம ஔஷதம் என்று கூறுவது கண்கூடானதே. ஆனால் நம்தேசத்தார் அதனை எடுத்துக்கொள்ளக் கூடியவர்களல்ல. அது அநேகர்க்கு வெறுக்கக் கூடியதா யிருக்கும். ஆதலால் இவைகளெல்லாம் கஷ்டமென் றெண்ணியே தன்வந்திரி முதலானவர்களும் வியாதிகளுக்கு மருந்துகளும் சொல்லி வைத்தார் கள். இனி சுரங்களின் பாகுபாடுகளையும் அவற்றால் உண்டாகும் கெடுதிகளையும், சில சுரங்களின் காரணங்களையும், தற்கால வைத்தி யர்கள் செய்துவரும் சிகிச்சைகளையும் தெளிவாக எழுதக்கூடுமான வரையில் எழுதுவது பலர்க்கு நன்மையை யுண்டுபண்ணுமென்று நினைக்கிறேன். இனி சொல்லும் சிகிச்சைகள் முக்கியமானவை என் றும் மேலான வைத்தியர்களெல்லாம் அங்கீகரிக்கக்கூடியவை யென் றும் இதைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் எளிதில் உணரலாம்.

---

## ஸ்திரீகள் பக்கம்.

(37-ம் பக்கத்தொடர்ச்சி)

மேற்கூறியவாறு மாமியாரும் மருமகளும் சந்திக்குமுன்பே ஒருவர்மேல் ஒருவர்க்கு வெறுப்புண்டாகிவிட்டிருந்தால், இருவரும் கலந்து சம்சாரம் செய் யும்போது ஆரம்பத்திலிருந்தே இருவர்க்கும் வெறுப்பும் விரோதமும் உண் டாகத் தடையென்ன? இந்த வெறுப்பும் விரோதமும் பலகாரணங்களால் நாளுக்குநாள் விர்த்தியடைகிறதேயன்றி குறைவதில்லை.

சிலசமயங்களில் தன்மனைவி அவளுடைய மாமியாரை யலட்சியம் செய்து அதுமுகாந்தரமாய் இருவரும் பூரணவிரோதிகளாய் விடுவதற்கு புரு டனே காரணபூதமாயிருக்கிறான். இதனால் அவனும் தன் ஆயுள் முழுதும் தன் அதிகாரத்தையும் குடும்பத்தில் தனக்குண்டான தலைமை ஸ்தானத்தை யும் இழந்து, குடும்பத்திற்கு நற்றுணைவியாகக்கூடியமனைவியைப் பேயாக்கி விட்டுத் தானும் அப்பேய்க்குப்பயந்து நடக்கும் அடிமையாய் அவதிப்படு கிறான். இதுமட்டுமோ அந்தோ "நல்ல உத்தமி" யென்று யாவரும் புக ழத்தக்க மனைவியை "ஆ! அவளா! அப்பா இராக்ஷசி, அவள் புருடனே யவளுக்கு நடுங்குகிறான்' என்று யாவரும் தூஷிக்கும்படி செய்துவிடு கிறான். புருடன் ஆரம்பத்தில் கொஞ்சம் யோசனையோடு நடந்து கொண் டால் பின்னால் இவ்வளவு விபரீதமும்நேரிடாது. எவ்வாறெனின்,—புதி தாய் வாழ்க்கைப்பட்ட மனைவி முதல் முதல் புருடனிடம் இரகசியமாய் "இன்று உமது தாயார் கால்படி பருப்பு குழம்பிற்குப் போடும்படி சொன் னார்கள். அதுபோதாதாக்குமென்று நான்அரைக்கால்படி அதிகமாய்ப்போட்டு

விட்டேன். அதற்காக ஏகமாய்க்கூச்சலிட்டார்கள்" என்று இவ்வாறு ஏதோ ஒரு பிராதுசெய்கிறாள். மனைவியன்பென்னும் மாயையில் புதிதாய் சிக்கியிருக்கும் புருடன் தன் வாழ்நாள்முழுதும் குடும்பவிஷயத்தில் மனோ நிம்மதியைத் தேடிக்கொள்ள விரும்பினால் அச்சமயத்தில்தான் மிக்கஜாக்கிரதையாய் நடந்துகொள்ளவேண்டும். மனைவி மேற்கண்டவாறு கூறியதைக் கேட்டதே அவளிடம் கொண்டுள்ள அன்பையொருபுறம் அடக்கிக்கொண்டு,

"அந்தம்மாள் கட்டளைப்படி நீசெய்யவேண்டுமேயன்றி மற்றவிஷயங்களை நீ கவனிக்கவேண்டிய அக்கரையில்லை. போதும் போதாது என்பதைப் பற்றி யுனக்கென்ன. போதாவிட்டால் அதற்குப் பொறுப்பாளி நீயல்லவே. இன்றைக்கு அந்தம்மாள் கட்டளையைமீறிநடந்தவள் இனிநாளை என்கட்டளையையும் சுலபமாய் மீறி நடப்பாய்" என்று கூறிவிடுவானேல், மறுபடி அவள் மாமியார் கட்டளையையாவது புருடன் கட்டளையையாவது ஒருபோதும் மீறி நடவாள். எந்த ஸ்திரீயும் தன்கணவனுடைய அன்பையிழந்துவிட பிரியப்படமாட்டாள். ஆகையால் ஒருகாரியத்தைச்செய்தால் புருடனுக்குத் தன்மேல் அன்பு குறைந்து வெறுப்புண்டாகுமென்றுமட்டும் தெரிந்தால் அதையொருபோதும் செய்யாள்.

புருடன் அப்படிக்கூறாமல் "அந்தக் கிழவிபேச்சைப்பற்றி யுனக்கென்ன. அவள் அப்படித்தான் அதிலேயே எல்லாம் முழுகிப்போயிற்றென்பாள். நீபேசாமல் உனக்கு எப்படிதோன்றுகிறதோ அப்படிசெய்" என்று கூறிவிட்டாலோ, மாமியாரை மட்டுமல்ல தன் கட்டளையையும் இலட்சியம் செய்யவேண்டாமென்று தானே மனைவிக்கு உபதேசித்தவனாவான்.

இனி மாமி மருகிகள் ஒருமித்து வாழவேண்டுமாயின் அந்தவொற்றுமையும் பரஸ்பர அன்பும் ஆரம்பத்திலேயே யுண்டாகவேண்டும். இருவரில் ஒருவர் ஆரம்பத்தில் உத்தமமான நெறியில்நடந்துகொண்டால் அந்த ஒற்றுமையேற்படும் என்பதில் அய்யமின்றாம். முற்காலத்தில் அதாவது கொஞ்சகாலத்திற்கு முன்பு பெண் கல்வி மிக்கஅருமை. இப்போது மணம் செய்துக் கொள்ளும் பெண்களில் ஏறக்குறைய பாதியாவது வாசித்தவர்களா யிருப்பார்களென்று நம்புகிறோம். ஆகையால் முன்னொடி மருமகள் நடந்துகொள்ள வேண்டிய முறைகளையே கூறுகிறோம்.

புருடனுடைய குடும்பத்தில் பிரவேசித்தவுடனே "புதுப்பெண்ணே புதுப்பெண்ணே......" என்கிற பழமொழிப்படி ஆரம்பத்தில் இரண்டு மூன்று நாட்கள்வரை பெண்ணுக்கு எல்லாவிஷயத்திலும் பட்சமாகவும் மரியாதையாகவுமே நடக்கும். முதல்முதல் பெண்ணைப் புருடன் மனைக்கனுப்பும்போது பெண்ணைச்சேர்ந்தவர்களில் யாராவது ஒருவர் கூடச்சென்று இரண்டுமூன்றுநாளாவது பெண் பழகுமட்டும் அங்கிருப்பதாகிய ஒருவழக்கமுமுண்டு. முதல் இரண்டு மூன்று நாட்கள்மட்டும் பெண்ணுக்கு மரியாதை நடப்பதற்கு அதுவும் ஒருகாரணமாகும். அதன்பிறகே மாமியாருடைய குணங்கள் கொஞ்சங்கொஞ்சமாய் வெளிவரத்தொடங்கும். பெண் சூக்ஷ்ம அறிவாளியாயின் அதற்குள்ளாகவே மாமியார் குணத்தை யொருவாறறிந்து கொள்ளலாம். அது எப்படியாயினும் ஒருபக்கமிருக்கட்டும் என்று வைத்துக் கொண்டு மருமகள் தனக்குள் சிலவிதிகளை யேற்படுத்திக்கொண்டு அவற்றின்படி நடந்துவரவேண்டும்.

1—வது:—நாம் இப்போது தாய்தந்தை சகோதரிமுதலிய யாவரையும் விட்டுவிட்டு இங்கு வந்துவிட்டோம். இங்கு நாம் செய்யவேண்டிய கடமைகள்தான் அதிகமாயிருக்கின்றன. நம்மேல் பட்சங்காட்டக் கடமைப்பட்ட

வர்கள் நமது புருடனும், மாமியாருமாகிய இவரே. இவர்களில் ஒருவர் அன்பை யிழந்தாலும் நமக்குத் துன்பமுண்டு. புருடன் ஏதாவது அறிவீனமான நடக்கையால் நம்மேல் அன்புபாராட்டாது விட்டானே மாமியாரின் அன்பொன்றே நமக்கு ஆதாரம். மாமியாரும் கொடுமையுடையவளா யிருக்கும்போது கணவன் அன்பு தவறிவிட்டாலோ மிக்க ஆபத்தே. அல்லது கல்வி யறிவில்லா முழுமூடத்தன்மையால் கண்மூடிக்கொண்டு எல்லா விஷயத்திற்கும் கிழவி சொல்லுக்கெல்லாம் தலையாட்டும் புருடனு யிருந்துவிட்டாலோ, மாமியார் அன்பையிழப்பது பெரிய ஆபத்தாய் முடியும். தாயின் கைவசத்திலிருக்கும் சொத்தை அவள் எங்கே நமக்குக்கொடுக்காமல் தன் பெண்களுக்காவது வேறு யாருக்காவது கொடுத்துவிடுவாளோ வென்ற பயத்தால் தன்தாய் தன்மனைவியை அடித்து நொறுக்கி என்ன அக்ரமம் செய்தாலும் பேசாமல் ஊமைபோலிருக்கும் கணவன்மாரும் உண்டு. இவ்விதமான காரணங்களால் மாமியார் அன்பு நமக்கு அவசியம் வேண்டியதே. இதைவிட்டு மாமியாரைப்பற்றி சிந்தித்தாலோ இப்போதில்லாவிட்டாலும் கொஞ்சகாலம் சென்றால் வயோதிகம்மேலிட்டு, இப்போது குரூரகுணமிருந்தாலும் அதெல்லாம் அடங்கி யொடுங்கி நமது போஷணைகக்கே எதிர் பார்க்க வேண்டியவள் மாமியார். இப்போது முன்வரப்போவதை நினைக்காமல் அவள் நம்மை அக்ரமமாய் நடத்தினுலும் நடத்தட்டும். நாம் கடவுளுக்குப் பொதுவாய் நமதுதாயை யெப்படி பட்சத்தோடு வஞ்சனையின்றி நடத்துவோமோ அவ்வாறே நடத்திவருவோம். அதற்கு மேலும் நம்மைச் சீர்மாறுசெய்ய அவளுக்கு எப்படி மனம்வருகிறதோ பார்ப்போம், என்று மாமியாரைப் பட்சத்தோடு நடத்தத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

2-வது:—குடும்பத்தைச்சேர்ந்த எல்லா நடவடிக்கைகளையும் பற்றி மாமியாரைத் தினந்தோறும் கேட்டு அவள்கட்டளைப்படியே நடந்துவரவேண்டும். அதனல் கொஞ்சகாலத்திற்குள் மாமியாருக்கு குடும்பராஜ்யபாரத்தை யின்னும் தானே பட்டங்கட்டிக்கொண்டு ஆளவேண்டுமென்று பிரியமிருப்பதும் அல்லது குடும்பபாரத்தை மருமகள்மேல் போட்டுவிட்டுத் தான் நிம்மதியாயிருக்கப் பிரியமிருப்பதும் தானே விளங்கிவிடும். (தொடரும்.)

---

(கீழ்வரும் மிக்க அபூர்வமான நாவல் முடியுமட்டும் சஞ்சிகையில் மாதாமாதம் வெளிவரும்.)

# க ற் கோ ட் டை

## 1-வது அத்தியாயம்.

### கமலாம்பாளும் வைரநாதனும் சந்திப்பதும் இராணியின் தீர்க்க தரிசனமும்.*

கண்ணகல்விசும்பிற்றண்ணொளிவீசம் பூரணமதியம் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. குளிர்ந்த மந்தமாருதம் எங்கும் வீசிக்கொண்டிருக்கிறது. அச்சமயம் மாலை ஏழுமணி யிருக்கும். †அமராவதியினும் மிக்க அழகும், ‡அளகாபுரியினும் மிக்க செல்வமும் வாய்ந்த இந்திரபுரிநகரின் ஓரத்தி

---

* தீர்க்க தரிசனம்=முன்னமே நடக்கப்போகும் சங்கதியைக் கூறுவது.
† அமராவதி=இந்திரன் நகரம் ‡ அளகாபுரி=குபேரன் நகரம்.

லுள்ள இராஜ பாட்டையில் ஏழெட்டுபேர் உயர்தரப் புரவிகளின்மேல் ஆரோக்கியமாய்ச் சென்றுகொண் டிருக்கிறார்கள். அக்கூட்டத்தின் தலைப் பில் சுமார் 50 வயதுடைய ஒருமாது உயர்தர உடைகளையும் நவரத்னங்கள் இழைக்கப்பட்ட ஆபரணங்களையும் அணிந்து கொண்டு ஒரு பஞ்சவர்ணப்புர வியின்மே லாரோகணித்துச் செல்கின்றாள். அவள் உருவமும், உடையும் சாயலும், பார்வையும் யாவும் கெம்பீரத்தையும், தனக்குமேல் உயர்ந்தவர்கள் ஒருவருமில்லை யென்ற மதிப்புடைய பெருமையையும் காட்டுகின்றன. அவளுக்கு இரண்டடி பின்னால் ஆறு அழகியமாதர் நடுவயதுடையவர்களும், நல்ல அழகுடையவர்களுமாய் உயர்தரப்புரவிகள் மேல் ஏறிக்கொண்டிருந் தார்கள். அவர்களும் விலையுயர்ந்த ஆடையாபரணங்க ளணிந்திருந்தார்கள். அவர்களுக்கு இரண்டடி பின்னால் ஆறுபேர் ஆடவர் செல்கின்றார்கள். அவர் களும் உயர்தரப் புரவிகளின் மேலேறிக் கொண்டிருக்கிறார்கள். விலையுயர்ந்த தும் நாணயமுமான உடைகளே அணிந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் 14 வயதுடைய வாலிபன். மற்ற ஐவரும் வயது முதிர்ந்தவர்கள்.

அக்கூட்டத்தின் எதிரில் ஒருவன் வருவானேயானால் அவர்களைக்கண்ட வுடனே முன்னே இருக்கிறமாது இராணி யென்றும், மற்றமாதர் தோழிக ளென்றும், பின்னால் வருகிற முதியோர்கள் மந்திரிமார் முதலிய பரிவார மென்றும், சிறுவன் இராணியின் கையாளென்றும் தெரிந்துகொள்வான்.

அந்த இராணி இந்திரபுரியின் அரசியாகிய கமலாபாய். ஏகாதிபத்திய மாய் அரசாள்வதில் மிகப் பிரியமுடையவள். மேலுக்கு யாவரும் தன்னை மகா கருணைபொருந்திய அரசியென்று கூறவேண்டுமென்ற விருப்பமுடைய வளாயினும் உள்ளத்தில் கடின சித்தமும் குரூரசுபாவமும், தன் மனப்போக் கின்படி நடக்கும் பிடிவாதமு முடையவள்.

இவர்கள் இந்திரபுரியைக் கடந்து சுமார் மூன்றுமைல் தூரம் சென்ற போது பாதைக்குச்சற்று தூரத்தில் வலதுபக்கம் ஒரு பிரம்மாண்டமான கட்டடம் தோன்றியது. அது தன் கண்களுக்குப் புலப்பட்டதே இராணி தன் குதிரையை மிக மெதுவாய் நடத்திப் பின்பக்கம் திரும்பி மந்திரிமாரை நோக்கி பிரபுக்களே "இதோ தெரிகிற கட்டிடந்தானே சேந்தனார் மடம் என்பது" என்றாள்.

**பிரபுக்கள்.**—"ஆம்" என்றார்கள்.

**அரசி.**—"நமது இந்திரபுரிவாசிகள் மிக்க இராஜ விசுவாசமுடையவர்கள். இப்போது இத்தகைய சமணமடங்கள் இராஜாங்கத்தில் அனேக மிருக் கின்றன. இந்த மடத்தை நமது நகர சங்கத்தார் விலைக்கு வாங்கிக் கொள்வதைப்பற்றி மிக்க சந்தோஷமடைகிறோம்" என்றாள்.

**பெரியமந்திரி.**—"அவர்கள் இதை வாங்கி ஏழைகளுக்கு அன்னமிடும் சாலை யாகவோ வைத்தியசாலை யாகவோ செய்துவிட உத்தேசித்திருக்கிறார் கள்," என்றான்.

**இராணி.**—"சரிதான். அதற்காக அவர்கள் நமது இராஜாங்கத்திற்கு ஒரு விலைகொடுக்கவேண்டுமல்லவா. அது இவ்வளவென்று ஏற்படவேண்டு மே. கட்டிடம் மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதைச்சூழ்ந்துள்ள தோட் டபூமி எவ்வளவு விஸ்தீரணமிருக்கிறது? இன்று நமது கொலுமுகத் தில் இப்பிரஸ்தாபம் நடந்தபோது மடத்தைச்சேர்ந்த பூமியெவ்வள வென்று கூறப்பட்டது?" என்று வினவினாள்.

இதைக்கேட்டதே மந்திரிகள் யாவரும் ஒருவரை யொருவர் பார்த்து விழிக்கத்தொடங்கினார்கள். ஒருவன் "ஆ! நான் மறந்துவிட்டேன்" என்றான். ஒருவன் "நான் அந்தப்பத்திரத்தை சரியாய்ப்பார்க்கவில்லை" யென்றான்.

இராணி:—"நல்லவேடிக்கை. நகரசங்கத்தார்க்கு நாம் இதை விற்கப்போகிறோம். அந்தபூமி இவ்வளவென்று தெரியாவிட்டால் எப்படி விலை மதிப்பது இந்த முக்கியமான தகவலைக்கூறக் கூடியவர்கள் இங்கே ஒருவருமில்லையா?" என்று யாவர் முகத்தையும் நோக்கினாள்.

இப்போது அரசிக்குண்டாகும் கோபம் யார்தலைமேல் விழுமோவென்று யாவரும் பயத்தோடு விழிக்கத் தொடங்கினார்கள். ஆனால் பின்னாலிருந்த வாலிபன்மட்டும் தைரியத்தோடு தன் குதிரையைத் தட்டி இராணியின் எதிரில் வந்து வணங்கி "மகாராணி! இதோ ஒருநொடிக்குள் தெரிந்து வருகிறேன்" என்று கூறிவிட்டு, இராணியின் விடைசகு எதிர் பாராமலே குதிரையைத் திருப்பி மேற்படி மடத்திற்குச் சற்று தூரத்தில் புலன்களில் சிலஆட்கள் வேலைசெய்துக்கொண்டிருக்கும் இடத்தைநோக்கி அதிவேகமாய்ச்சென்றான். அவன் செய்கையைக்கண்ட இராணியும் மற்றவர்களும் குதிரைகளைத் தட்டென்று நிறுத்தினார்கள். வாலிபனோ இரண்டுமூன்று நிமிடங்களுக்குள் திரும்பிவந்து அரசியின்முன்நின்று "மகாராணி! சேந்தனூர் மடத்தைச் சேர்ந்த தோட்ட பூமி 15 ஏகர் விஸ்தீரணமுடையது. அதன்றி அதைச்சூழ்ந்துள்ள அகழி வேறே யிருக்கிறது" என்று கூறிவிட்டு கூட்டத்தின் பினபக்கம் வந்துவிடத்திரும்பினான்.

இராணி அவனைப்போக விடாது தடுத்து "பேஷ் கண்ணா! நீ நல்ல புத்திசாலி. பிற்காலத்தில் நீ பிரக்யாதியுடைய ஒருசேனாதிபதியாகவாவது, முதல்தர இராஜ தந்திரியாகவாவது ஆவாய் என்று உன் நடக்கையால் தெரிகிறது. நீ இன்று இவர்களுக்கெல்லாம் நல்ல புத்திகற்பித்தாய். நான் உன் பெரிய தந்தையைக் காணும்போது உன்னைப்பற்றிப் புகழ்ந்துகூறமறவேன்" என்று அவனை யன்போடு தோள்மேல் தட்டிகொடுத்துவிட்டு மந்திரிமாரை நோக்கி,

"சே சே! பிரபுக்களே! இத்தனைபேர் புரவிகள்மேல் உட்கார்ந்துகொண்டு கோட்டான்கள் போல் விழிக்கிறீர்களே. கடைசியில் சிறு பையனுக்கிருந்த சமயோசித புத்தி யுங்களுக்கில்லாமற் போயிற்றே" என்று கூறிவிட்டு,

"சரி, போகட்டும். இன்னொருவிஷயமாவது யாவருக்காவது நினைவிலிருக்கிறதா பார்ப்போம். நகரச்சங்கத்தாரை இம்மடத்தை விலைக்கு வாங்கும்படி பிரேரேபித்தது ஒருமனிதனென்றும், அவன் இதன் கிரையத்தொகையில் மூன்றில் ஒருபங்கு தன் சொந்தப்பணத்திலிருந்தே கொடுப்பதாய் நகரச்சங்கத்தாருக்கு வாக்களித்திருப்பதாகவும் தெரிகிறதல்லவா. அந்த உதாரகுண செல்வவந்தன் யார் தெரியுமா?" என்று வினவினாள்.

முன்நேரிட்ட அவமானத்தை யொழித்துக்கொள்ள இதேதருணமென்று யாவரும் ஒரே குரலாய், "தெரியும், தெரியும்" அவர் பெயர் செல்வராயர். அவர் கோடீஸ்வரரான வர்த்தகர். மிக்க நல்லவர். அவருக்கு நகரத்தில் "கருணாலயம்" என்ற ஒருமாளிகை யிருக்கிறது. அவர் எப்போதும் வாசம் செய்வது நாட்டிலுள்ள கற்கோட்டை என்றமாளிகையில். அது சற்று தூரத்தில் இருக்கிறது" என்றார்கள்.

இராணி "ஆ. அந்த செல்வராயர்என்ற வர்த்தகர் சாதாரணமாய் கோடீஸ்வரர் என்றே கூறப்படுகிறாரென்றும், அவர் மிக்க இராஜவிசுவாசமும் தரும சிந்தனையுமுடையவரென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆகையால் சமீபத்திலிருக்கும் அவர் மாளிகைக்குச்சென்றுவருவோம்" என்று யாவரையும் நோக்கிக் கூறினள். உடனே யாவரும் துரிதமாய்க் கற்கோட்டையை நோக்கிச் சென்றார்கள்.

இப்போது இவர்கள் செல்லும் பாதைகாடுபோன்றது. சேந்தன் மடத்தைக் கடந்தபிறகு கற்கோட்டையிருக்கும் இளங்காடு என்ற கிராமம் வரையில் ஒருகுடிசையேனுமில்லை. இடையிலுள்ள சுமார் இரண்டுமைல் தூரமும் வழிப்போக்கர்கள் அஞ்சுமிடம். வழிபறிக்கும் கள்ளருடைய தொழிலுக்கு அது மிக்க வசதியானவிடம். இராணியும் பரிவாரமும் குதிரைகளைத் துரிதமாய் நடத்தி இளங்காடென்ற சிறுகிராமத்தையும்தாண்டி கற்கோட்டைக்குச் செல்லும் கிளைப்பாதையில் திரும்பினர்கள். கிராமத்திற்கு சுமார் அரைமைல் தூரத்தில் அப்பாதை திரும்புகிறது. சுமார் அரைக்கால் மைல் தூரம் செல்லும் அந்தக்கிளைப்பாதை நேராய் கற்கோட்டைக்குச்செல்கிறது. அதன் இருபுறமும் இருக்கும் பிரம்மாண்டமான சாலைமரங்களின் கிளைகள் மேற்புறம் ஒன்றோடொன்று கலந்துகொண்டிருப்பதால் பாதை முழுதும் ஒரே பந்தலிட்டதுபோலிருந்தது. அங்குசெல்லும்போது இவர்கள் குதிரைகளை மெதுவாய் நடத்திச்சென்று கற்கோட்டையின் வாயிற்படியை யடைந்தார்கள்.

வாசிப்போர்க்கு பின்வரும் சங்கதிகள் நன்குவிளங்குவதற்காக இங்கு ஒரு விஷயம் நாம் விவரிக்கவேண்டும். அதாவது அக்காலத்தில் அங்கு மதச்சச்சரவு நடந்து கொண்டிருந்தது. விரோதங்கொண்டிருந்த இரண்டு மதங்களில் ஒன்று பழையமதமென்றும் ஒன்றுபுதுமதமென்றும் வைத்துக்கொள்வோம். இரண்டு மதஸ்தரும் வணங்குவது ஒரே கடவுளாயினும் அதைச் சேர்ந்த கொள்கைகளில் மாறுதலுண்டு. அந்த மாறுதல்களை யுண்டாக்கியவர்களே புதுமதத்தைச் சேர்ந்தவர்கள். பழைய மதக் கொள்கையின்படி மடங்களென்றும் சந்நியாசிகளென்றும் மடாதிபதிகளென்றும் இருந்தார்கள். புதுமதத்தார் தாங்கள் செய்த மாறுதல்களே சீர்திருத்தமடைந்தவையென்று கூறி, மடங்கள் முதலியவை யிருக்கலாகாதென்று ஏற்பாடுசெய்து விட்டார்கள். இப்போது இராஜா புதுமதமாகையால் பழையமதப்படி நடப்பவர்க்கு கொலைத்தண்டனை யென்று சட்டம் பிறந்திருக்கிறது. மடாதிபதிகளெல்லாம் கொல்லப்பட்டோ ஓடியோ போய்விட்டார்கள். மடங்கள் அவற்றைச் சேர்ந்த சொத்துகள் முதலியயாவும் அரசனல் பறிமுதலாக்கப்பட்டது. அவற்றுள் ஒன்றுதான் சேந்தனர்மடம் என்பது. ஜனங்களில் பெரும்பாலார் உயிருக்குப்பயந்து புதுமதத்தில் சேர்ந்துகொண்டார்கள். ஆயினும் சிலர் அந்தரங்கத்தில் பழைய மதக் கொள்கையைக் கையாடிக் கொண்டிருந்தார்கள். கமலாபாய் அரசியாயிருக்கையில் அவ்வாறு இரகசியமாய் கூட்டங்கூடி பழைய கொள்கையை யனுசரிப்பவர்களில் பலர் தண்டிக்கப்பட்டார்கள். அது பெரிய இராஜத்துரோகமாய்க் கருதப்பட்டதால் அதைவிசாரித்து தண்டிக்க ஒருபிரத்தியேக நியாயசபை யிருந்தது. அக்குற்றத்தில் சிக்கினல் ஒருவன் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்திலிருந்தாலும் அவன் தலை தப்புவது அசாத்தியம். இனி கதையைத் தொடங்குவாம்.

(தொடரும்.)

# பொது சமாசாரங்கள்

## கலிவிருத்தம்.

சீர்கொண்ட செந்தமிழிற் செவிக்கினிய வசனமதாய் முறையுடனே
பேர்கொண்ட ராவ்பகதூர் கிருஷ்ணசாமிச் சடாவலபர் சரிதமதை
நேர்கொண்ட நெறிமுறையி லுணர்த்தியசல் லாநந்த போதினியாம்
பார்கொண்ட பத்ரிகையைக் கண்டேனா னுவகைபூத்தேன் களித்துமன்னே.!

சென்னை புரசை
11—8—1916.

ரா. கி. போ.

---

பிரான்ஸ் தேசத்தின் தலைநகரான பாரிஸ்பட்டணத்தில் ஒரு சீமான் நாலாயிரம் பவுன் செலவிட்டுக் காகிதத்தினால் ஒரு கட்டிடம் கட்டியிருக்கிறார். அந்தக் கட்டிடத்தில் காகிதத்தைத்தவிர வேறு எந்தச் சாமானும் சேர்க்கப்படவில்லையாம்.

ஸ்பெயின் தேசத்தின் தலைநகரான மாட்ரிட்பட்டணத்திற்கு அருகேயுள்ள அரண்மனை ஐரோப்பாக்கண்டத்திலுள்ள அரண்மனைகளிலெல்லாம் பெரிது. அதனை முற்றிலும் சுற்றிப்பார்க்க நாலுநாள் செல்லுமாம். அதாவது சுமார் 125 மயில் தூரத்தைப் போல் இருக்குமென்று தெரிகின்றது.

பொடி மட்டைக்குள் நாரத்தை யிலையை வைத்துக்கொண்டால் அதிலுள்ள பொடி சுகந்த மூக்குத் தூளைவிட மிகுந்த மணமாயிருக்குமாம்.

வட இந்தியாவிலுள்ள பரிட்கோட் என்னும் சிறிய சமஸ்தானத்து அரசரின் பூட்டியார் (பாட்டியாரின்தாய்) சில தினங்களுக்கு முன் காலஞ் சென்றார். இவர் 100-வயது வரை வாழ்ந்தாரென்று தெரிகின்றது. இவர் அத்தேயத்தில் தமதுகாலத்தில் நான்கு அரசர்கள் அரசாண்டதைக் கண்டிருக்கிறார்.

அமெரிக்காவில் பஞ்சாபிகள், சீக்கியர், பம்பாய் வாசிகள், தென்னிந்தியாவாசிகள் முதலிய இந்துக்கள் பதினாயிரம்பேர் இருக்கின்றனர். இவர்களில் நமது தென்னிந்தியாவாசிகளே மிகுதி.

இப்பொழுது நடக்கும் ஐரோப்பாயுத்தத்தில் இங்கிலாந்திற்குத் தினந்தோறும் 60-லட்சம் பவுன் செலவாகின்றது. 9 கோடி ரூபாய் !

வான் மேக்கர் என்ற அமெரிக்கா கோடீஸ்வரர் ஓர் ஆகாயக் கப்பல் செய்து வருகிறார். அவர் அதில் ஏறி 30 மணி நேரத்தில் அத்லாந்திக் மகா சமுத்ரத்தைத்தாண்டி இங்கிலாந்துக்குப்போகத் தீர்மானித்திருக்கிறாராம்!

தென் ஆப்பிரிக்காவில் ஒருவித மரம் இருக்கிறது. அதனை அறுத்தாலும் வெட்டினாலும் மனிதருக்குத் தும்மல் உண்டாகிறது. பூச்சிகளுள் ஒன்றும் இதனை நாடுவதில்லை. இது மிகவும் சசப்பாம். வேலைக்காக வெட்டிக் காய்ந்த மரம் கெட்டியாயும் பார்வைக்கு அழகாயும் இருக்கின்றதாம். இம்மரம் ஜலத்தில் நீண்ட நாளைக்குக் கெடாமல் இருப்பதால் கடற்பாலங்கள் முதலிய வேலைகளுக்கு மிகவும் உபயோகமாகின்றதாம். இதற்குப் பெயர் தும்மல் மரமாம்.

மச்சங்களைப் பிடிக்குஞ்செடி அமெரிக்காவில் சில இடங்களில் இருக்கிறது. லத்தின் பாஷையில் இதன் நாமம் 'உட்ரிகுவேரியா,' இந்தச் செடி சிறுமச்சங்களைத் தன்னிடம் இழுத்துத் திடீரென்று மின்சாரக் கம்பியின் குமிழை அழுத்தியதுபோல அம்மச்சங்களை மூடிக் கொள்கிறதாம்.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்

நள௵ ஆவணிமீ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கொல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1916-ம௵ ஆகஸ்டு—செப்டம்பர்மீ

| ஆகஸ்டுமீ | ஆவணிமீ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 16 | 1 | புத | திரி-16-4 | பூர-3-31 | அமி 4 சி | 2-க்குள் விருச்சிகம் நிஷேகம் |
| 17 | 2 | வி | சது-13-51 | உத்-2-15 | சித்த 60 | கரிநாள் |
| 18 | 3 | வெ | பஞ்-11-7 | ரே-2-1 | அமி 60 | கர்ணவேதை |
| 19 | 4 | ச | சஷ்-10-48 | அசு-2-57 | சித்த 60 | மூலிகைகள் உபயோகிக்க |
| 20 | 5 | ஞா | சப்-11-20 | பர-5-11 | சித்த 60 | கிருத்திகைவிரதம் |
| 21 | 6 | தி | அஷ்-13-4 | *கார்-8-31 | மர 8 அ | ஸ்ரீஜயந்தி |
| 22 | 7 | செ | நவ-15-38 | ரோ-13-5 | அமி 13 சி | நவக்கிரக சாந்திசெய்ய |
| 23 | 8 | புத | தச-20-16 | மிரு-18-38 | சித்த 60 | கன்னி வியாபாரம் செய்ய |
| 24 | 9 | வி | ஏகா-24-50 | திரு-25-45 | மர 26 அ | கரிநாள் |
| 25 | 10 | வெ | துவா-29-50 | புன-31-11 | சித் 31 ம | வியாதியஸ்தர்மருந்துண்ண |
| 26 | 11 | ச | திர-34-43 | பூச-37-28 | சித் 37 மர | புதுதானியம் புசிக்க |
| 27 | 12 | ஞா | சது-39-7 | ஆயி-43-19 | சித் 43 மர | ஜெபம் பூர்த்திசெய்ய |
| 28 | 13 | தி | ● அமா 43-37 | மக-48-23 | மர 43 சி | அமாவாசைவிரதம் |
| 29 | 14 | செ | பிர-45-33 | பூர-52-24 | சித் 52 அ | ஆயுதப்பிரயோகம்செய்ய |
| 30 | 15 | புத | துதி-46-36 | உத்-54-12 | அமி 54 ம | கன்னி விவாக உபநயனம் |
| 31 | 16 | வி | திரி-46-37 | அஸ்-55-10 | சித்த 60 | ஸாமோபாகர்மம் |
| செப்டம்பர்மீ 1 | 17 | வெ | சது-45-21 | சித்-56-18 | சித்த 60 | விநாயக சதுர்த்தி |
| 2 | 18 | ச | பஞ்-44-37 | சுவா-54-28 | அமி 54 சி | புது தானியம் புசிக்க |
| 3 | 19 | ஞா | சஷ் -39-34 | விசா-51-45 | மர 52 சி | சஷ்டி விரதம் |
| 4 | 20 | தி | சப்-35-12 | அநு-48-27 | சித்த 60 | கிரகப்பிரவேசம் |
| 5 | 21 | செ | அஷ்-30-19 | கேட்-44-46 | சித் 45 அ | புது அடுப்புபோட |
| 6 | 22 | புத | நவ-24-45 | மூல-44-16 | மர 44 அ | 8-க்குள் மழை |
| 7 | 23 | வி | தச-18-46 | பூரா-40-45 | சித்த 60 | சுவர்ணபாத்திரம் புழங்க |
| 8 | 24 | வெ | ஏகா-12-52 | உத்-36-36 | சித் 37 ம | வியாதிக்கு மருந்துசாப்பிட |
| 9 | 25 | ச | து-6-49 | திரு-32-35 | சித்த 60 | புது தானியம் புசிக்க |
| 10 | 26 | ஞா | திர-0-59<br>சது-54-37 | அவி-28-54 | மர 29 சி | இராத்திரி பூமுடித்தல் |
| 11 | 27 | தி | ○ பௌள 50-57 | சத-25-48 | சித் 26 ம | வெங்காயம் நட |
| 12 | 28 | செ | பிர-46-53 | பூர-23-20 | மர 23 அ | கரிநாள் |
| 13 | 29 | பு | துதி-44-7 | உத்-21-48 | சித்த 60 | மருந்து சாப்பிட |
| 14 | 30 | வி | திரி-42-15 | ரேவ-21-18 | சித் 21 அ | வியாபாரம் செய்ய |
| 15 | 31 | வெ | சது-41-37 | அசு-21-59 | அமி 22 சி | சாந்திசெய்ய |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS